


அமரர் பண்டிதர்

சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை அவர்களின்

# ஞாபகார்த்த மலர்

21 . 07 . 2007

உ
சிவமயம்



# அமரர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை
(சு. வே) அவர்கள்

தாயின் மடியில் 24. 05. 1921

இறைவன் அடியில் 22. 06. 2007

## திதி நிர்ணய வெண்பா

நாவற் குழியீன்ற நல்வேலுப் பிள்ளைபெயர்
தேவகுணம் மிக்கவன்காண் திகழ்பண் டிதர் (சு.வே)
மேவுசர்வ சித்தானி மிளிர்பூர்வம் சப்தமியில்
ஆவலொடு சிவடினக்கே ஆளானான் அருள்பெரிதே.

# சமர்ப்பணம்

எமக்கெல்லாம்

அன்னையாய் துணையிருந்து

எங்களது

வாழ்க்கைக்கு வழிகாட்டி

எம்மையெல்லாம்

வாழ வைத்த எம் தெய்வமே!

அமரராய் ஆனபோதும்

அங்கிருந்தே எமக்கருள

உம்மரும்

உறவுகள் நாம் அனைவருமே

இன்று உவப்புடன் அளிக்கும்

இம்மலர் ஏற்று நீர்

ஈந்திடும் நும் நல்லாசி!

சிவமயம்



## விநாயகப் பெருமான் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணத் திரட்டு

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமார்ந் தாரே!

### திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் த ருளுவ தினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஊர் எல்லாம்கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேர் இட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கிநினைப்பு ஒளிந்தார்களே

ஆர்த் தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக்காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட்டெரி மூட்டி
நீர்த்தலை மூழ்ந்தவர் நீதியிலோரே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் – உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன்னடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்தாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறையறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்!

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்த மண்ணானதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டு மென்றே யறிவாரிலையே!

திருச்சிற்றம்பலம்



உ
சிவமயம்



# கந்தஷஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறன
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள்முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க

என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க

பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க

ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க

பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க

கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க

பின்கை இரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணையாக

நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க

அடியேன் வதனம் அசைவுள நேரம்

கடுகவே வந்து கனகவேல் காக்க

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்

சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலஷ்மிகளில்
வீரலஷ்மிக்கு விருந்துண வாகச்

சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்

இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த

குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்

மேவிய வடிவுறும் வேலவா போற்றி

தேவர்கள் சேனா பதியே போற்றி

குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி

இடும்பா யுதனே இடும்பா போற்றி

கடம்பா போற்றி கந்தா போற்றி

வெட்சி புனையும் வேளே போற்றி

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்

சரணம் சரணம் சண்முகா சரணம்.

கவசம் முற்றிற்று.



உ

சிவமயம்

## இயற்கை எய்திய

# திரு சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்களது வாழ்க்கை வரலாறு

நீர்வளம் நிலவளம் நிறைந்த ஈழமணித் திருநாட்டின் சிரமென விளங்கும் வடமாகாணத்தின் தலைநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாவற்குழி என்னும் சிற்றூரில் வாழ்ந்தவர்கள் விசுவலிங்கம் தம்பதியர்.

அவர்தம் இல்லறத்தின் பயனாய் சுப்பிரமணியம், கந்தையா. சரவணமுத்து என்ற மூன்று ஆண்மக்கள் அவதரித்தனர்.

இவர்களில் மூத்தவரான சுப்பிரமணியம் தம் பெற்றோர் நிச்சயம் செய்த பெண் தையல்நாயகியைக் கரம் பற்றினார்.

சுப்பிரமணியம் ஊக்கமும் திறமையும் மிக்கதொரு விவசாயியாகத் திகழ்ந்தார். சமயத்தில் கொண்ட ஈடுபாடும், இயற்கையாய் அமைந்த தமிழ்ப் புலமையும் கோயில்களில் புராணபடனங்கள் ஓதும் வேளை அதற்குப் பயன் சொல்லும் அளவுக்கு அவருக்குப் பெருமை தேடிக் கொடுத்தன.

சுப்பிரமணியம் - தையல்நாயகி தம்பதியினரின் தவப்பயன் காரணமாக மூன்று ஆண்மக்களையும் இரண்டு பெண் மக்களையும் பெற்று மகிழ்ந்தனர்.

இவர்கள் முறையே வேலுப்பிள்ளை, தங்கலட்சுமி, கண்மணி, மகேந்திரராசா மற்றும் நடராசா என்போர் ஆவர்.

குடும்பத்து மூத்த பிள்ளையாய் 1921ஆம் ஆண்டு மே மாதம் இருபத்து நான்காம் திகதி பிறந்தவர் வேலுப்பிள்ளை ஆவார்.

சிறுவயதில் தாயை இழக்க நேர்ந்ததால் தமது இளைய சகோதரிகளுக்கு வழிகாட்டி வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு குடும்பத்தின் மூத்த பிள்ளையான வேலுப்பிள்ளையைச் சேர்ந்தது. இளம் வயதிலேயே அப்பெரும் பொறுப்பினைத் துணிச்சலுடன் ஏற்றார் வேலுப்பிள்ளை.

அதற்காக, வேலுப்பிள்ளை தமது பள்ளிப் படிப்பில் அக்கறை காட்டாது இருந்துவிடவில்லை. இளவயதுக் கல்வியில் சிறப் புடன் சித்திபெற்று தமது 18 ஆவது வயதில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் மாணவனாகச் சேர்ந்தார் வேலுப் பிள்ளை. 1942 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியராக அங்கிருந்து வெளியேற அவரால் முடிந்தது. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் கற்றுத்தேறி தமிழ்ப் பண்டித ராகவும் ஆக அவரால் முடிந்தது.

முதலில் ஹற்றன் பொஸ்கோ கல்லூரியில் ஆரம்பித்த அவரது ஆசிரியப் பணி 1946 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டுவரை டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் என்ற பிரதேசங்களின் முன்னணிப் பாடசாலைகள் வரை தொடர்ந்தது.

இக்காலகட்டத்தில் இலக்கியத்துறை, சிறுகதைத்துறை, நாடகத்துறை என்பவற்றில் தமது திறனை வெளிப்படுத்தித் தமக்கென முத்திரை பதித்துக் கொண்டார் வேலுப்பிள்ளை. கலைத்துறையில் சு.வே. என்னும் இரண்டெழுத்துக்களால் இவர் பெயர் நிலைத்தது.

தமது குடும்பப் பொறுப்புணர்ந்து தந்தையார், சகோதர சகோதரிகளின் வாழ்வு முன்னேற்றம் குறித்து அக்கறை காட்டிச் செயற்பட்டதுடன், சிறிய பராயத்தில் தமது பெற்றோரை ஒருவர்பின் ஒருவராய் இழந்து நின்ற தமது சிறிய தந்தையான கந்தையாவின் ஒரே மகள் சரஸ்வதியையும் தமது குடும்பத் துடன் இணைத்துக் கொண்டார். வேலுப்பிள்ளை தங்கைமார் மூவருக்கும், தம்பிமார் மூவருக்கும் காலாகாலத்தில் உரிய துணைவர், துணைவிகள் தேடி மணமுடித்து வைத்துக் குடும்பத்தின் மூத்தவன் என்ற தமது கடமையை சீரிய முறையில் செவ்வனே நிறைவேற்றி வைத்தார் வேலுப்பிள்ளை.

தாம் மட்டும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபாடு காட்டாது தாமாக விரும்பி பிரம்மசரியத்தை ஏற்றுக்கொண்டார் வேலுப்பிள்ளை.

தமது மூத்த தங்கை தங்கலட்சுமி, இளைய தங்கை கண்மணி, இவ்விருவரது துணைவர்கள், தமது தந்தையார், இளைய தம்பி

நடராஜா ஆகிய இத்தனை பேரையும் காலச்சக்கரச் சுழற்சியில் காலன் கவர்ந்த வேளைகளில் வேலுப்பிள்ளை பாசத்தின் வசப்பட்டுக் கண்ணீர் சிந்திக் கதறி அழுததுண்டு.

அந்த வேளைகளிலெல்லாம் தமது ஒன்றுவிட்ட சகோதரி சரஸ்வதி, தம்பிமார் என்போரின் பிள்ளைகளே அவருக்கு ஆறுதல் கூறி அணைத்துத் தேற்றிய மருமக்கள் மற்றும் பெறாமக்களாவர். அவரைப் பொறுத்தவரை அவர்கள் அவரது பெறாமக்கள் என்றல்லாது தாம் பெற்ற மக்கள் போன்றே பாசம் செலுத்தினார். அதேபோன்று அவர்களும்கூட அவரைப் பெரியப்பா, மாமா என்ற விதத்திலல்லது தமது தந்தைமார் ஸ்தானத்திலே அவரை வைத்து பாசம் காட்டி, மதிப்புக் கொடுத்து வந்தனர்.

பற்றற்ற துறவிபோல் காட்டிவந்தாலும், அவர் தம் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள், ஊரவர் மீது பற்றும் பாசமும் காட்டி வாழ்ந்ததை ஊரே அறியும்.

இயற்கையின் நியதிக்கு முன்னால் எவராலும் போட்டியிட முடியாதே.

தமது ஓய்வுகாலத்தை தம்பி மகேந்திரராசாவின் குடும்பத்துடன் கழித்து மகிழ்ந்திருந்த அவரை திடீரென இவ்விதம் ஆண்டவன் தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

அவர் இறைவனடி சேர்ந்த நாளை நினைவுகூர்ந்து அவரது ஆத்ம சாந்திக்காக நாம் அனைவரும் மனதாரப் பிரார்த்திப்பதே நாம் அவருக்குச் செய்யத்தக்க கைமாறாகும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



## என் உயிர் அண்ணா!

அண்ணா! அண்ணா! என்று அன்போடு அழைத்த
போதெல்லாம் பாசத்தைச் சுமந்து வந்து தங்கை தங்கை
என்று அழைத்து அரவணைத்து மகிழ்ந்தீர்களே!
உங்களை நான் எப்பிறப்பில் காண்பேன் அண்ணா!

எங்கள் குடும்ப குலவிளக்கே! எங்கள் வாழ்வின்
வழிகாட்டியே! என் தாயும் தந்தையும் நீங்களே!
அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த எங்கள் இதயக் கோயிலே!
உங்கள் பேச்சு மொழிகள் என் காதில் மணியாக ஒலிக்கிறது!
உங்கள் புன்னகை என்னுள்ளத்தில் மலராக மலர்கிறது!

உங்கள் அறிவுரைகள் என் வாழ்க்கைக்கு
துணை புரிகின்றது! அன்புடைய ஆசானாய்
ஆதரவு காட்டி அறமொழிகள் கூறி என்
வாழ்வின் வளத்திற்கு உதவினீர்களே அண்ணா!
உங்கள் உருவம் என் நெஞ்சில் ஒளிர்விட்டுக்
கொண்டே இருக்கின்றது!

நான் கடல் கடந்து வாழ்ந்தாலும்
என் நினைவிலிருந்து நீங்காத தெய்வமே!
உங்கள் பிரிவால் நான் துன்பக் கடலில்
மூழ்கித் தவிக்கின்றேன் அண்ணா! உங்கள் ஆத்மா
சாந்திக்காக நான் ஆண்டவனிடம் பிரார்த்திக்கின்றேன்!

உங்கள் பிரிவால்
துயருறும் தங்கை
சரஸ்வதி அம்மா குடும்பம்

# அண்ணா! நீ ஒரு செயல்வீரன்

'தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

இது வள்ளுவர் பெருமானின் கூற்று.

24.05.1921 இல் சுப்பிரமணியம், தையல்நாயகி தம்பதியினருக்கு (எங்கள் பெற்றோர்) மூத்த மகனாய்ப் பிறந்தாய். குடும்பநிலை வறுமை என்றும் நோயில் சிக்கிய காலம் தந்தையார் ஒரு விவசாயி. வருமானம் மிகக் குறைவு. பிள்ளைகள் ஐந்து. மூன்று ஆண், இரண்டு பெண்கள். குடும்பத்தில் மூத்தவர்தான் எனது அண்ணா செயல்வீரன் பண்டிதர் சு.வே.

அண்ணாவின் ஆரம்பக் கல்விப் பருவம் வந்ததும் நாவற்குழியில் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள சிறிய பாடசாலையில் தனது கல்வியைத் தொடங்கினார். ஐந்தாம் வகுப்பு முடிந்ததும் தொடர்கல்வி பற்றி பெற்றோர் சிந்திக்கத் தொடங்கினார்கள். வறுமை நிலையில் என்ன செய்வதென எங்கள் சிறிய தந்தையாருடன் ஆலோசித்தபோது (விசுவலிங்கம் கந்தையா) எங்களுக்கு கஷ்டங்கள் இருந்தாலும் அவனைத் தொடர்ந்து படிக்க விட வேண்டும் என ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தார். எனவே அயல் கிராமமாகிய கோயிலாக்கண்டி மகாலஷ்மி வித்தியாசாலையில் எஸ்.எஸ்.ஸி. வரைகற்றார். பின்னர் ஆசிரியர் கலாசாலை புகுமுகத் தேர்வில் சித்தியெய்தி திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்தார்.

ஊக்கமும் உதவிகளும் அளித்த சிறிய தந்தையார் அவர்கள் சு.வேயின் கல்வி முன்னேற்றத்தைக் காணாது காலன் அவரை அழைத்து விட்டான். ஆனால், அவர் தனது ஞாபகச் சின்னமாக எமது பெற்றோரிடமும் அண்ணாவிடமும் தனது ஒரே மகளான மூன்று வயதுச் சிறுமி சரஸ்வதியை ஒப்படைத்துச் சென்றார்.

ஆகவே, அண்ணா சு.வேயிற்கு 3 சகோதரிகள். ஆசிரியர் கலாசாலை முடிந்ததும் 2, 3 வருடங்கள் வேலை கிடைக்காது கஷ்டப்பட்டார். அக்காலகட்டத்தில் தாயாரும் காலமானார்.

வறுமையும் மிக மோசமாகத் தாண்டவமாடியது. இக்கால கட்டத்தில் இன்னொரு சிறிய தந்தையார் அமரர் க.வ. கந்தையினார் (சிறிய தாயின் கணவர்) ஹற்றனில் வியாபாரம். அவர் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் வேலை தேடுவதில் செயற்பட்டார். அவரின் முயற்சியால் டிக்கோயா என்ற இடத்தில் ஒரு தோட்டப் பாடசாலையில் ஆசிரியர் தொழிலுக்குச் சென்றார். அண்ணாவின் திறமைகளை அறிந்த ஹற்றன் சென் பொஸ்கோ கல்லூரி நிறுவனத்தினர் தமது கல்லூரியில் ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டனர்.

அக்காலகட்டத்தில் அங்கு அவருக்கு நாரந்தனை வாசியாகிய திரு யோசெப் (ஆங்கிலப் பட்டதாரி) நண்பரானார். அவரின் ஊக்கமும் செயல்பாடும் அவரை எஸ்.எஸ்.ஸி (ஆங்கில) பரீட்சையில் சித்தியடைய வைத்தது. தொடர்ந்தும் தன் விடா முயற்சியாலும் அமரர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கண இலக்கியங்கள் அவரைத் தமிழ் பண்டிதராக்க உதவியது.

அண்ணா சேவையாற்றிய பாடசாலைகள்

1. டிக்கோயா தோட்டப் பாடசாலை
2. ஹற்றன் சென் பொஸ்கோ
3. யாழ் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
4. யாழ் மானிப்பாய் இந்துக்கல்லூரி

இலங்கை அரசினர் பாடநூல் பிரசுரசபையில் தனது ஓய்வூதிய காலம் வரை சேவையாற்றியனார்.

அதன் பின்னர் குடும்பத்தின் வறுமை நிலையும் குறைந்தது. தொடர்ந்து அவர் தமது சகோதரிகளின் திருமண விடயங்களைக் கவனிக்கத் தொடங்கினார். தனது வல்லமைக்கேற்றவாறு வரன்களைத் தேடி மணம் முடித்து வைத்தார். அதன் பின்னர் தந்தையாரும் நாங்களும் அவரின் திருமணம் பற்றி முயற்சித்தபோது தான் திருமணம் செய்வதில்லை எனத் தீர்க்கமாகக் கூறிவிட்டார்.

தொடர்ந்தும் தனது சகோதர சகோதரிகளின் பெறாமக்கள் மருமக்களின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்.

இவர் நாட்டிற்கும் மக்களுக்கும் தன்னால் முடிந்த தொண்டினையும் செய்துள்ளார். வானொலி நாடகங்கள், சிறுகதைகள், உருவகக் கதைகள் மாணவருக்கான தமிழ் செயல்நூல் பயிற்சிகள், கட்டுரைகள் முதலியவைகள் ஆக்கிப் படைத்துள்ளார்.

(இவை யாவும் எனது தந்தையார் சொல்லக் கேட்டவையும் நான் நேரடியாகப் பார்த்தவையும்)

எனவே அண்ணா (சு.வே) எங்கள் குலவிளக்கே! உனது ஆத்ம சாந்திக்காக எங்கள் குலதெய்வம் தேரடி வைரவர், நாவற்குழி சித்திர வேலாயுதர் பாதாரவிந்தங்களை வணங்கி நிற்கும் அன்புத் தம்பி மகேந்திரம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தம்பி
மகேந்திரம்

---

இனியொரு விடியலில் அந்த
அன்பின் திருவுருவம் தெருவினில்
உலா வருமா.....!

சந்தணம் மாமா விண்ணுலகிலும்
சந்தண மணம் பரப்ப
கடவுளைப் பிரார்த்திக்கிறோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- சரவணமுத்து குமாரவேல்

# என் பெரியப்பாவே!

என் பெரியப்பாவே!
என் பெரியப்பாவே!
என்னை வளர்த்தெடுத்தவரே!
வணங்குகிறேன் உங்களை
என் ஆத்மாவால்.
என்ன பெரியப்பா?
என்னை விட்டுப் பிரிந்து விட்டீர்களா?
நம்ப முடியவில்லையே!
என் காதினில் உங்கள் குரல் கிசுகிசுப்பாக....
காலதேவனால்
உங்கள் நினைவுகளை
என்னிடமிருந்து பிரிக்க முடியவில்லையே!
காலங்கள் ஓடும்
ஆனால்
உங்கள் நினைவுகள்
என்னில் வாழும்
உங்கள் விம்பத்தை
என் உயிரில்
வரைந்து கொண்டேன்
உங்கள் எண்ணங்களை
மனதுக்குள் பூட்டி
வைத்துள்ளேன்
இறுதியாகக் கூட
உங்கள்
முகம் பார்க்கவில்லை
இறுதியாக என்னிடம்
விடைபெறவுமில்லை
என் வாழ்வின் இறுதிவரை
உங்கள் நினைவுகளுடனேயே
வாழ்ந்திருப்பேன்!

உங்கள் பெறாமகன்
சிவயோகன்

# எந்தன் பெரியப்பாவே!

எந்தன் பெரியப்பாவே!
எங்கே சென்றுவிட்டீர்கள்!
என் குடும்ப விளக்கே!
என் குடும்பத்தைச் சுமந்தவரே!
எந்தன் பெரியப்பாவே!
என்னை வளர்த்தீர்கள்
ஆளாக்கினீர்கள்
என் ஆத்மாவில் கலந்தீர்கள்
என் கலங்கரை விளக்கே!
என் வாழ்வின் தீபமே!
எனக்கு நிழல் தரும் விருட்சமே!
நான் என்ன கேட்டு இல்லையென்றீர்கள்!
இதோ உங்கள்
பாதச்சுவடுகள் தேடியே நான்
உங்கள் விழிகளால்
என்னை ஒருதடவை
பாருங்கள்
உங்கள் நினைவுகளில்
முக்குளித்து...
உங்கள் நினைவுகள் என்னை உசுப்பி
என்னை இயக்கி
ஓ... என் பெரியப்பாவே!
விடைபெற்று விட்டீர்களா
எம்மிடமிருந்து
எந்தன் குடும்பத்தை
வளமாக்கிய நதியே
உங்கள்
நினைவு நதியில் மூழ்குகிறேன்
நான்!

உங்கள் பெறாமகன்
சிவமோகன்

## என் அன்பான பெரியப்பாவுக்கு...

என் அன்பான
பெரியப்பாவே!
என்னை அரவணைத்து
என்னை வளர்த்தெடுத்து
கல்வி கற்பித்து ஆளாக்கியவரே!
இன்று நீங்கள் இல்லை தான்
ஆனால்
என் மனநதியில்
ஓராயிரம் நினைவலைகள்
நினைவுகள் எல்லாம்
திரட்சியாகி உங்களைக் குறித்தே!
என் உயிரில் கலந்தீர்கள்
எனக்கு மணம் முடித்து வைத்தீர்கள்!
வாரணாவை நான் பெற்றெடுத்தபோது அருகில்
இருந்து என்னையும் வாரணாவையும்
கவனித்தீர்கள்.
என் அன்பான பெரியப்பாவே!
திவ்வியனை நான் பெற்றெடுத்தபோது
மகிழ்ந்தீர்கள்
உங்கள் மருமகனையும்
ஆளாக்கியவர் நீங்கள்தான்
படிப்பித்தவர் நீங்கள்தான்
இரட்டைக் கடமைகள்
வரையறை இல்லாக் கடமைகள்
என் ஜீவனில்
கலந்து விட்டவரே
நாங்கள் உள்ள மட்டும்
உங்கள் நினைவுகளும்
வாழும்!

உங்கள் பெறாமகன் கிரிஜா
மருமகன் பிரபாகரன்
பேரன்கள் வாரணா, திவ்வியன்

## என் பெரியப்பாவுக்கு
## ஒரு கவிதா மாலை

என் உயிர்மை கொண்டு
என் பொன்மானுக்கு
ஒரு கவிதா மாலை!
எந்தன் பொன்மான்
என்னை விட்டு விட்டு
நீண்டதூரம் போய்விட்டது.
அருகில் இருந்து அரவணைத்த
இந்த நதி
இன்று படுத்துக்கொண்டது
என் வீட்டில்
ஒரு சேவல் தான் அடைகாத்தது
எந்தன் வீட்டின்
இருளை நீக்கியது
இந்த ஒளிதான்.
என் அக இருளை நீக்கியதும்
இந்த ஒளிதான்.
சுமைதாங்கி இன்றுதான் ஓய்வெடுத்துக்கொண்டது.
உழைத்த கரங்கள்
இன்று அசையவில்லை.
அணைத்த கரங்கள்
இன்று தீயினில் வெந்ததோ!
எனக்குள் தீப்பொறி ஏற்றியவரே!
எனக்குள் இன்பம் சுமக்க வைத்தவரே!
என் பெரியப்பாவே!
என் ஜீவனே!
என் ஜீவனின் ஜீவனே!
என் மூச்சுக் காற்றே!
என் மூச்சின் மூச்சே!
எங்கே போய்விட்டீர்கள்
என்னை விட்டுவிட்டு

மனம் வந்ததா
என்னை விட்டு அகல
பெரியப்பா!
என் ஜீவனில்
உங்கள் நினைவுகளை
பத்திரப்படுத்திக் கொண்டேன்!
என் உயிரினில் உங்களைப்
படம்பிடித்துக் கொண்டேன்
எங்கள்
இலக்கியச் சண்டைகள்
இன்று ஒய்ந்தது
என் உயிரின் இலக்கியமே!
ஒரு முறை
ஒரே ஒரு முறை
உங்களை நான்
பார்க்க வேண்டும்.
நீங்கள் என்னை அழைப்பீர்களே!
"அம்மா" என வாஞ்சையுடன்
அப்படி அழையுங்கள்.
என் பெரியப்பாவே!
என் விழியே!
என் விழியின் விழியே!
நான் இடருற்றபோது!
சோதனைகளைச் சந்தித்தபோது
என் ஊன்றுகோலாக....
என் மனதுக்கு தீபமாக...
என் ஆத்மாவின்
தீபத்தின் தீபமாக...
ஓ! என் பெரியப்பாவே!
மீண்டும் ஒரு முறை
உங்களுடன் வாழ வேண்டும்
அதில் ஒரு திருத்தம்
"நீங்கள் என் பிள்ளை
நான் உங்கள் தந்தை"

இப்படிப் பிறக்க வேண்டும்
என உங்களிடம் கேட்கிறேன்
ஏனெனில்
நீங்கள் தான்
என் தெய்வம்
நான் தெய்வத்தை
உங்கள் உருவில்தான்
நடமாடக் கண்டேன்
நான் துன்பம் அனுபவித்தபோது
உங்கள் ஆத்மாவால்
என்னை அரவணைத்துக் கொண்டீர்களே?
எப்படி மறப்பேன்
எப்படி மறப்பேன்
எந்தன் ஜீவன்
உங்கள் பெயரைத்தான்
தினமும் அர்ச்சிக்கிறது
என்தன் உதடுகள்
உங்களையே
முணுமுணுக்கிறது
என் உயிரே
எப்போது மீண்டும்
சந்திப்பது?
நாம் 'அளக்கும் கதைகள்'
பேசுவது எப்போது?
எவ்வளவு கதைகள்
கதைத்திருப்போம்?
ஊடல்தான் எத்தனை
இந்த வாழ்வினில்
இந்தப் பறவையின்
சிறகுகளால்தான்
நான் துன்புற்ற வேளை
பறந்தேன்
இன்று

என் சிறகுகளால்
நான் பறக்கத் தொடங்கியதும்
இந்தப் பறவை
அன்புப் பறவை
தன் சிறகுகளை
ஒடித்துக் கொண்டதோ!
என் வாழ்வின் தீபமே!
இன்னும் ஒரு முறை
இன்னும் ஒரு முறை
வாழ்ந்து விடுவோம்
வாருங்கள் பெரியப்பா!
அப்போது
பேசாத கதைகள்
எல்லாம் பேசுவோம்
உங்களிடம் சொல்வதற்கு
எண்ணம்! இன்னும் ஒன்றல்ல
நூறு இருக்கு......!
இனி செல்லச் சண்டைகள்
யாரிடம் காண்பிப்பேன்
எனக்கு
எண்ணையும் எழுத்தையும் அறிவித்தவரே
என் சிந்தனையை வளர்த்தவரே
உங்களை எண்ணி....
இந்தப் பாடல் வரிகள்....
"தீப தீபங்கள் ஓயும் முன்பே
நீயும் நெய்யாக வந்தாய்"
கேட்கிறதா பெரியப்பா?"
"என்ன பெரியப்பா
நான் கேட்கின்றேன்
நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள்"

உங்கள் பெறாமகள் வனஜா (அம்மா)

# அமரர் முதறிஞர் சு. வேலுப்பிள்ளை

- செங்கை ஆழியான் க. குணராசா -

ஈழத்தின் மூத்த படைப்பாளி ஒருவரை இலக்கிய உலகம் இழந்து சோகத்தில் ஆழ்ந்து விட்டது. இலக்கிய உலகின் இரண்டாம் பரம்பரைப் படைப்பாளிகளைத் தொடர்ந்து நாம் இழந்து வருகின்றோம். சொக்கன், நந்தி, வரதர், புத்தொளி, தில்லைச்சிவன், கே. வி. நடராஜன், செம்பியன் செல்வன், இராசையா எனத் தொடர்ந்து நமது சு.வே. அவர்கள் தன் பயணத்தை ஆரம்பித்துவிட்டார். இவர்கள் இலக்கிய உலகில் வெறுமையாக்கிவிட்டுச் சென்ற இடங்களை நிரப்ப இன்று எவருமில்லை.

ஈழகேசரிப் பண்ணையில் முகிழ்ந்த முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர் சு. வேலுப்பிள்ளை எனும் சு.வே. ஆவார். உருவகக் கதைகளின் பிதாமகர். ஈழகேசரியில் கிடைக்காத பலன் (1943) என்ற சிறுகதையுடன் இலக்கிய உலகில் பிரவேசிக்கும் சு.வே. அதனைத் தொடர்ந்து, மனிதமிருகம், புத்தனின் சுவடு, காலத்தின் தண்டனை, பாசம், பிரேமை, மனநிழல், அன்புக்கறை, சிற்றன்னை, தோழன் முதலான சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதியுள்ளார். மண்வாசனை, வெறி, பாரிசவாதம், பூ, பாற்காவடி, அக்கினி, ஸ்டிரைக், புகை, தகிப்பு, தெய்வம், பெரியம்மா என்பன ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவரின் சிறுகதைத் தொகுப்பு சு.வேயின் மண் வாசனை ஆகும். முழுமையான அனைத்துச் சிறுகதைகளின் தொகுப்பு பாற்காவடி என்பதாகும். மணற்கோவில் என்ற உருவகக்கதை ராஜாஜியால் பாராட்டப்பெற்றது.

'மனிதனின் சிந்தனைகளைத் தூண்டி உணர்ச்சிகளைத் தொடுவதுடன், அவனுடைய பாவனா சக்தியை மிகுதிப்படுத்து வதாயும் மனதிற்கு இன்பம் அளிப்பதாயும் அமைவது இலக்கியம்' என்பது சு.வே. யின் கருத்து. 'நல்ல கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் ஒன்று நல்ல இலக்கியம் ஆகி விடுவதில்லை.

நல்ல கருத்தை நல்ல கலையழகோடு பிரதிபலிப்பதுதான் நல்ல இலக்கியமாகும்' என்ற சரஸ்வதி சிதம்பரரகுநாதனின் கருத்துக்கும் இவர் உடன்பாடு. சு.வே. சிறுகதைகளின் சிறப்பு அவரின் கூர்மையான அவதானிப்பும், சுவையான வர்ணனையும் மானிட நேயத்தைத் தூண்டும் கருத்துக்களுமாம். அவரின் சிறுகதைகளில் 'கிடைக்காத பலன்', 'பாற்காவடி' ஆகிய இரண்டும் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு அணிசேர்ப்பன.

சு.வே. யின் முதற் சிறுகதை 'கிடைக்காத பலன்' என்பதாகும். இச்சிறுகதை பின்னர் இவரது தொகுதியில் 'கிழவனும் வத்தகைக் கொடிகளும்' எனப் பெயர் மாற்றம் பெற்று, கருவை நெகிழ்த்தி யுள்ளது. ஒரு கிழவன் மூன்று வத்தகைக் கொடிகளை ஆசையோடு அவதானமாக வளர்த்து வருகின்றான். 'கிழவனின் முகத்திலே கால தேவனின் சாட்டைத் தழும்புகள் நன்றாகப் பதிந்திருந்தன. கன்னங்கள் குழி விழுந்திருந்தன. வத்தகைக் கொடியின் இலையிலுள்ள வெட்டுகள் போல, தோல் எலும்போடு ஒட்டித் திரைந்து போயிருந்தது. வத்தகைக் கொடிகளில் மூன்று பிஞ்சு, இரண்டு காய்கள் பிடித்திருந்தன. அவற்றை அன்போடு தடவிக் கொடுக்கின்றான். இவை எப்போது பழுக்கும்? என ஆவலோடு காத்திருக்கிறான் கிழவன். இரண்டு காய்களும் களவு போகின்றன. 'ஓகோ, யாரோ பசிக்கொடுமையால் கொண்டுபோய் விட்டார்கள், போகட்டும்' எனக் கிழவன் திருப்திப்படுகின்றான். மற்றைய மூன்று காய்களுக்காகக் காத்திருக்கின்றான். குடிசைக்கு வெளியே கட்டிலைப் போட்டுப் படுத்துக் காவல் காக்கிறான். காலம் கழிகின்றது. அந்த வத்தகைக் காய்கள் பூரணமாகப் பழுத்து விடுகின்றன. ஆனால், அவற்றைப் பிடுங்க கிழவன் எழுந்து வரவில்லை - இச்சிறுகதையைப் படித்து முடிந்ததும் எழுகின்ற உணர்ச்சிதான் இச்சிறுகதையின் வெற்றி.

சு.வே.யின் 'பாற்காவடி', பலராலும் விதந்துரைக்கப்பட்ட நல்லதொரு சிறுகதை. ஒரு வகையில் கோயில் வழிபாட்டில் உள்ள குறைபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் சு.வே. சுட்டிக்காட்டு கின்றார். 'ஆத்மசாந்திக்கு உறைவிடமான அந்தச் சந்நிதானம் கலகலப்பில் மூழ்கிப்போய்க் கிடந்தது. இது தெய்வத்தின் சம்மதம் அன்று. மனித வர்க்கத்தின் ஏகோபித்த அபிப்பிராயம். கோயில்

களில் கேளிக்கைகள் அதிகரித்து விட்டன. மயிலிறகுகள் கற்றை கற்றையாகக் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்ட காவடிகளை வசதியானவர் எடுத்து நிற்கிறார்கள். இது வசதியான சுப்பிரமணியர் கோயிலில் திருக்கார்த்திகை அன்று காணப்படும் காட்சி. இன்னொரு இடத்தில் சடைத்து வளர்ந்த ஆலமரத்தின் கீழ் சிறுகுடிலில் வீற்றிருக்கும் அம்மன் கோயில். வீரனும் அவன் மனைவி வள்ளியும் பாற்காவடி எடுத்துத் தம் நேர்த்தியை நிறைவேற்ற வருக்கிறார்கள். அங்கு கொட்டுமேளம், ஜனக் கூச்சல், பகட்டு எதுவுமில்லை. இரு கோயில்களிலும் காவடிகள் புறப்படுகின்றன - இதுதான் பாற்காவடியின் கதை. ஆனால், சமூக ஏற்றத்தாழ்வுகளை மனிதரிலும் அவர்கள் வணங்கும் கோயில்களிலும் ஏற்றிக் கதையைச் சொல்லி விடுகின்ற முறையும், அதற்குரிய சொற்களும் பாற்காவடியில் சு.வே.யின் படைப்பனுபவத்தினையும் உணர வைத்துள்ளது.

சு.வே. போல உருவகக் கதைகள் படைப்பவர்கள் ஈழத்தில் எவருமில்லை. அவருடைய உருவகக் கதைகளைத் தொகுத்து மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ஒரு தொகுதியை தன் மித்ரா வெளியீடாக வெளியிட்டுள்ளார். யாழ் இலக்கிய வட்டம் ஒரு பெரிய வெளியீட்டு விழா எடுத்துப் பெருமை பெற்றது. ஈழத்து இலக்கியத்தின் ஒரு பலமான தாபனமாக விளங்கி வரும் யாழ் இலக்கிய வட்டத்தினைத் தாபித்த மூத்த படைப்பாளிகளில் ஒருவர் சு.வே. யாழ் இலக்கிய வட்டத்திற்காக ‘இலக்கியம்’ என்றொரு சஞ்சிகையையும் சில இதழ்கள் நடாத்தினார். யாழ் இலக்கிய வட்டத்தின் படைப்பாளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். அன்னாரின் இழப்பு ஈழத்து இலக்கியத்திற்கு ஈடுசெய்ய முடியாதது. அவருடைய ஆத்மா எங்களுக்கு என்றும் கூடவே இருந்து வழிகாட்டும்.

செங்கை ஆழியான் க. குணராசா

75/10 A, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

# நாவற்குழி மண் எழுத்திற்கு அளித்த மாபெரும் சொத்து பண்டிதர் சு.வே.

- முல்லை அமுதன் -

போராட்ட இக்காலகட்டத்திலே தமிழ் அறிஞர்களையும் அவர்களின் ஆக்கங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது தமிழர்களான எங்களின் முக்கிய கடமையாகும். இதுவும் வித்தியாசமானதொரு போராட்டமே. இப்போராட்டத்தில் தற்போது நாம் இழந்து நிற்பது சு.வே. என்று செல்லமாக அழைக்கப்படும் நாவற்குழி மண் தந்த மாமனிதர் பண்டிதர் சு.வேலுப்பிள்ளை அவர்கள்.

2004இல் எனக்கு ஊருக்கு குடும்பமாகச் செல்லவேண்டிய அவசியமேற்பட்டது. அப்போது என்னால் மிகவும் மதிக்கப் பட்டவரும் எனக்கு மிகவும் மனதிற்கினிய எழுத்தாளரும் குடும்ப நண்பருமான சு.வேயின் இல்லத்திற்குச் சென்று அவருடன் அவர் சகோதரங்களையும் சந்திக்கும் அரும்வாய்ப்புக் கிடைத்தது. அப்போது சு.வே. அவர்களின் தளர்நிலையும் போராட்ட சூழல் காரணமாக சொத்தழிவுகளுடன் அவரால் சேகரிக்கப்பட்ட விலைமதிப்பற்ற புத்தகங்களும் மழைக்கும் கறையானுக்கும் அழிந்து கிடந்தன. அவற்றில் இருந்து ஓரளவிற்கு பழுதடையாத நூல்களை தட்டி எடுத்து என்னிடம் வற்புறுத்தித் தந்தார். நோய் காரணமாக வடிவாகக்கதைக்கமுடியவில்லை. அப்படியிருந்தும் கதைத்தார். அவரது கவலை முழுவதும் தனக்கு தமிழுக்கு இன்னும் தொண்டாற்ற முடியவில்லை என்பதே. அவரின் நோய்த் தாக்கத்தால் அவரின் உச்சரிப்புகள் எமக்கு விளங்காதபோது அவரது சகோதரர் மகேந்திரம் ஆசிரியர் அவர்கள் எமக்கு விளக்கம் கொடுத்தார். வாழ்க்கையில் பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்த சு.வே. அவர்களின் தேவைகளை அன்பே உருவான அவரது சகோதரி கவனித்துக் கொண்டிருந்தார். அன்று கனத்த மனத்துடன் திரும்பிய எமக்கு இன்று அவரின் இழப்பு (22.06.2007) மேலும் கனக்கவைக்கிறது.

தமிழர்களில் சு.வே. போன்ற பல எழுத்தாளர்களையும் புத்திஜீவிகளையும் அறிஞர்களையும் போராட்டத்தினாலும் திட்டமிட்ட மருந்துத் தட்டுப்பாடு, உணவுப்பற்றாக்குறை, வறுமை, சுகாதாரச் சீர்கேடுகள் என்பவற்றால் காலத்திற்கு முன்பே இழந்து கொண்டிருக்கிறோம். இருக்கும் காலத்திலும் அவர்களின் வளர்ச்சிகள் ஏதோ ஒரு விதத்தில் மழுங்கடிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. ஏனையோர்களையும் சிந்திக்க இடமளிப்ப தில்லை. தமிழர்களுக்கு இந்நிலையிலிருந்து எப்போது விடிவு கிடைக்குமோ....?

04.05.1921இல் பிறந்த சு.வே. அவர்களின் இலக்கியப்பணி அளவிடமுடியாது. ஈழத்து உருவகக்கதையின் தந்தை என்று அனைவராலும் புகழப்பட்டார். ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர், உருவகக்கதை, கட்டுரை- நாடகம் ஆகிய இலக்கியத் துறைகளில் சிறந்து விளங்கினார். அத்தோடு தமிழ் பண்டிதராகவும் இருந்த சு.வே. அவர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அவரிடம் கல்வி கற்றோர் பலர் தமிழில் மிகுந்த பற்றுள்ளவர்களாகவும் அறிவுப் பெட்டகங்களாகவும் திகழ் கின்றனர். நாவற்குழியில் தமிழில் திறமையான எந்த ஒரு மாணவனைக் கேட்டாலும் ஏதோ ஒரு வகையில் அவனது குருவாக சு.வே. திகழ்வார்.

திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவனான சு.வே. அவர்கள் 1942இல் பயிற்றப்பட்ட தமிழாசிரியரானார். இலங்கையின் பல பாகங்களிலும் அதாவது ஹற்றன், டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் போன்ற பிரதேசப் பாடசாலைகளில் 1946 முதல் 1981வரை தன் ஆசிரியப்பணியை மேற்கொண்டார். பின்பு தன் சொந்த ஊரான நாவற்குழி மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார்.

நடுத்தரவர்க்க குடும்பத்தைச் சேர்ந்த சு.வே. அவர்களின் திறமை உலகறியச் செய்தமையும் காலம் கடந்தேயாகும். சு.வே. யின் சிறுகதைகள் கொண்ட ''பாற்காவடி'' (2002) என்ற நூலில் அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். இன்றைய இலக்கிய உலகினால் தொண்ணூறு விழுக்காடு மறக்கப்பட்டு, எங்கோ ஒரு மூலையிலே இருளில் கிடந்த என்னை மறுமலர்ச்சிச் சிறுகதைகள்,

ஈழகேசரிச் சிறுகதைகள் என்பவற்றினூடாக வெளிவரச்செய்த பெருமை தம்பி செங்கைஆழியானிற்கே என்றும் மேலும் அவர் தன்னைப்பற்றிக் கூறும்போது "சின்னஞ் சிறிய எளிய மான் மனக்கோயிற் கொட்டிலில் இருந்து பல்லாண்டுகளுக்கு முன் தலைமேற்கொண்ட இந்தப் பாற்காவடியை கன்னித் தமிழ்த் தேவியின் திருக்கோவிற் சந்நிதியிலே, இலக்கிய ஆர்வலர்களான பக்தர்களின் திருமுன்னிலையில் இறக்கி வைத்துள்ளேன். என் பணி முடிந்துவிட்டது. சுபம்! இந்தப் பாற்காவடியே, எனக்கு இவ்வுலக வாழ்வின் எச்சங்கள், மிச்சங்கள், வாரிசுகள் ... இவையே என் பெயர் விளங்க வந்த குழந்தைகள்." இவ்வாறு தன் ஆதங்கத்தைத் தெரிவிக்கிறார்.

இவரது சிறுகதைகளை எடுத்துக்கொண்டால் ஈழகேசரியில் வெளியானவை,

1. கிடைக்காத பலன் - ஈழகேசரி 1943 (முதற் சிறுகதை)
2. மனித மிருகம்
3. புத்தனின் சுவடு
4. காலத்தின் தண்டனை
5. பாசம்
6. பிரேமை
7. மனநிழல்
8. அன்புக்கறை
9. சிற்றன்னை
10. தோழன்

இவரது உருவகக்கதைகள் மறுமலர்ச்சி இதழ்களிலும் பல்வேறு ஊடகங்களிலும் வெளிவந்தவை,

1. மண்வாசனை
2. வெறி
3. பாரிசவாதம்
4. பூ
5. பாற்காவடி

6. அக்கினி

7. ஸ்ட்ரைக்

8. புகை

9. தகிப்பு

10. பெரியம்மா

கதைகள் தொகுப்பாக புத்தக உருவில் வெளிவந்தவை

1. மண்வாசனை - சிறுகதைத் தொகுப்பு

2. பாற்காவடி - சிறுகதைத் தொகுப்பு

3. மணற்கோவில் - உருவகக்கதைத்தொகுப்பு

சு.வே. யின் கதைகள் வந்த ஏனைய நூல்கள்

1. ஈழகேசரிச்சிறுகதைகள்

2. மறுமலர்ச்சிச்சிறுகதைகள்

கல்வித் திணைக்களத்தில் பாடநூல் தொகுப்பாசிரியராகவும் சில காலம் பணிபுரிந்தார்.

1. சூழல்

2. சுற்றாடல்கல்வி

3. தமிழ்

4. தமிழ்மொழி

இவரது சிறுவர் இலக்கிய நூல்கள்

1. சந்திரமதி

2. குகன்

இவரது பரிசுபெற்ற நாடகங்கள் மற்றும் வானொலி தொடர் நாடகங்கள்

1. வஞ்சி - ஓரங்க நாடகம் (1965) முதற்பரிசு பெற்றது.

2. எழிலரசி - முழுநீளநாடகம் (1966) முதற்பரிசு பெற்றது.

3. மண்வாசனை - இலங்கை வானொலியில் (1960) பரிசு பெற்றது.

4. ஒருமைநெறித் தெய்வம் - இலங்கை வானொலியின் பரிசு (1968)

5. ஏட்டிலிருந்து - தொடர் நாடகம் 16 வாரம் (1964)

6. கிராமராச்சியம் - தொடர் நாடகம் 32 வாரம் (1964)

7. பொன்னாச்சிக்குளம் - தொடர் நாடகம் 97 வாரம் (1967-68)

8. நவயுகம் - தொடர் நாடகம் 12 வாரம் (1969)

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய இலக்கிய உரைகள்

1. இலக்கியரசனை - 32 வாரம் ஒலிபரப்பாகியது. (1965)
2. திருகுறட்சித்திரம் - 36 வாரம் ஒலிபரப்பாகியது. (1968)
3. நாட்டுக்கு நல்லது - 24 வாரம் ஒலிபரப்பாகியது. (1969)

சு.வே. அவர்கள் வாழும்போதே கூறுவது 'தனது கதைகளை வாசித்துவிட்டு நீண்டதொரு பெருமூச்சு ஒரு பக்தனிடமிருந்து வருமாயின் அஃதொன்றே நான் மனநிறைவடையப்போதும் என் நெஞ்சு குளிர்வதற்கு நன்றும் தீதும் எனக்கு ஒன்றே' என்பார். . இவரின் கதைகளைத் தேடிப்படியுங்கள். அவரது ஆத்மா மனநிறைவடையும். படிப்பவர் மனமும் குளிரும்.

---

வாழ்க்கையில் சாவு ஒரு இழப்பில்லை. ஆனால், நாம் வாழும்போது நம்முள்ளிருக்கும் ஒன்று இறந்துபோவதுதான் பெரிய இழப்பு.

உலகின் மிகக் கடினமானவை மூன்று மட்டுமே, அவை இரகசியங்களை காப்பது, நமக்கு பிறர் செய்த தீங்கை மறப்பது, ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவழிப்பது.

பயனில்லாமல் ஒரு வார்த்தை கூட உனது வெளிவராமல் ஜாக்கிரதையாக இரு.

- ஆதி சங்கரர்

# இலக்கியவாதி சு.வே.

- நீர்வை பொன்னையன் -

சு.வே. ஒரு சிறந்த படைப்பாளி. அவர் பண்டிதர் பரம்பரையைச் சார்ந்தவர். ஆனால் பண்டிதர் பரம்பரையிடமுள்ள இறுக்கமும் வித்துவச் செருக்கும் சு.வேயிடம் எள்ளளவும் இல்லை. அவர் மரபுவழி இலக்கியத் தடத்தைப் பேணி வந்த அதேவேளை நவீன இலக்கிய போக்கையும் அனுசரித்தவர். இது மாத்திரமல்ல நவீன இலக்கியத்தின் ஓர் அம்சமான சிறுகதைத் துறையில் பயணித்து தரமான சிறுகதைகளையும் படைத்துள்ளார்.

சு.வே. ஈழகேசரி சகாப்தத்தில் சிறுகதை எழுத ஆரம்பித்தார். மறுமலர்ச்சிக் காலத்திலும் எழுதினார். அதன் பின்னரும் தொடர்ந்து சிறுகதைகளைப் படைத்தார்.


ஈழத்தில் உருவகக் கதைகள் எழுதுபவர்கள் மிகக்குறைவு. உருவகக்கதை படைப்பாளிகளில் முன்னணியில் நின்றவர் சு.வே. அவர் அரிய உருவகக்கதைகளைப் படைத்துள்ளார்.

முன்னோடி எழுத்தாளர்களான வரதர், சொக்கன், கனக செந்திநாதன், நந்தி போன்ற படைப்பாளிகளைப்போல நெகிழ்வுத் தன்மை உடையவர். ஆயினும் முற்போக்கு அணியைச் சார்ந்த எழுத்தாளன் அமைப்புடன் அவர் எதுவித தொடர்பும் வைத்திருக்கவில்லை. அதேவேளை முற்போக்கு எழுத்தாளர் களான எம்முடன் நட்புரிமையுடன் பழகி வந்துள்ளார்.

ஏனைய எழுத்தாளர்களைவிட சு.வே எமது மாணவ பரம்பரையினரின் கல்வி வளர்ச்சிக்கு பெரும்பங்கு ஆற்றியுள்ளார். அவர் அனேக தரமான சிறந்த பாட நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் இவரது செயற்பாடு பணம் சார்ந்ததல்ல அறிவு சார்ந்ததாகும்.

சு.வே. பழகுவதற்கு இனிமையானவர். ஏனைய எழுத்தாளர்களை அன்புடன் அரவணைப்பார். மென்மையாக பேசும் சுபாவம். தன்னடக்கமுள்ளவர். வித்துவச் செருக்கு துளிகூட இல்லாதவர். அவரது இறுதிகாலத்தில் அவர் கொழும்பில் இருந்தார் என அறிந்தேன். அவரது சரியான முகவரி கிடைக்காததால் அவரை ஒருமுறை தானும் உயிருடன் பார்க்கமுடியாமல் போனது எனக்கு மிகப்பெரும் கவலை.

சு.வே.யின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மாத்திரமல்ல இலக்கிய உலகிற்கே பாரிய இழப்பாகும்.



நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற 'பாற்காவடி' நூல் வெளியீட்டில் எழுத்தாளர்கள் செங்கைஆழியான், சொக்கன் ஆகியோர்களுடன்

# தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடம்பிடித்தவர் சு.வே.

- வேல் அமுதன் -

முதுபெரும் எழுத்தாளர் சு.வே. (நாவற்குழியூர் பண்டிதர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை) அவர்களை நான் நன்கு அறிவேன். ஐம்பதுகளின் பிற்பகுதியில் தனலட்சுமி புத்தகசாலையிலே நான் சிலகாலம் தொழில்புரிந்த காலத்தில் அங்கே அடிக்கடிவந்து போகும் பேர்வழி சு.வே.

மடிப்புக் குலையாத வெள்ளை வேட்டி, வெள்ளை வெளிர் என ஜொலிக்கும் முழுக்கை நஷனல் சேட் - செக்கச் சிவந்த அழகிய மேனி - வெற்றிலை சதா குதப்புவதால் சிவந்த உதடுகள் - புன்முறுவல் அவற்றோடு மெதுமையும் கனிவும் கலந்த இனிய பேச்சு அவரின் அழகுக்கு அழகு சேர்த்தன.

சு.வே. நான் யாழ்ப்பாணம் தம்பித்துரை புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை முதலிய புத்தகசாலைகளிலும், 'நடமாடும் நூலகம்' என வர்ணிக்கப்பட்ட குரும்பசிட்டியூர் கனக செந்தில் நாதனின் இல்லத்திலும் சந்தித்திருக்கிறேன்.

சு.வே. ஒழுக்கசீலர் - நற்பழக்கவழக்கம் உடையவர். ஆசாரம் மிக்கவர். கடமை தவறாதவர், கண்ணியமானவர். இவற்றுக்கு மேலாக மட்டுவில் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நல் மாணக்கரான அவர் ஆசிரியராகப் பணிபுரிந்து நூற்றுக்கணக்கான நல் மாணாக்கர்களை உருவாக்கியவர்.

சு.வேயும், இரசிகமணியும், குரும்பசிட்டியூர் பண்டிதர் வ. நடராசாவும் இன்னும் சிலரும் சேர்ந்தே ஈழகேசரிப் பொன்னையா பாடநூல் வெளியிட உதவியவர்கள். ஈழகேசரியாரால் பாலபாடம் முதல் தொல்காப்பியம் வரை நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை நூல்களை வெளியிட முடிந்ததென்றால் அகில இலங்கைத் தமிழ்ப் பாடசாலை கல்வித் தேவையைத் தங்குதடையின்றி நிறைவு செய்ய முடிந்ததென்றால் அதன் வெற்றியின் இரகசியம் நான் மேற்குறிப்பிட்ட ''அறிஞர் குழாமின்'' ஆதரவே.

''சு.வேதான் இலங்கையின் உருவகக் கதையின் பிதாமகன்'' என எங்களுக்கு முதன்முதலில்அறிமுகம் செய்து வைத்தவரும் இரசிகமணியே! அதுமட்டுமல்ல, மூதறிஞர் ராஜாஜி மெச்சிய எழுத்தாளரும் சு.வேயே என அம்பலப்படுத்தியவரும் இரசிக மணியே!

சு.வேஅருமையான பேச்சாளர். சிறுகதை எழுத்தாளர். உருவகக் கதை பிதாமகன். பல பாடநூல்களை ஆக்கிய நூலாசிரியர். சு.வேயின் முதற் சிறுகதை ''கிடைக்காத பலன்''. இது ஈழகேசரி யில் 1943 இல் வெளியானது. இதனைத் தொடர்ந்து பல சிறுகதை களை எழுதியுள்ளார்.

கொடூர இராணுவ நடவடிக்கையின் பிரதிகளாக இடம்பெயர்ந்த சு.வே. எழுத்துப்பிரதிகளாகவிருந்த ஏராளம் சிறுகதைகளை இழக்க நேரிட்டது. எஞ்சிய கதைகள் சில 'பாற்காவடி', 'மண் வாசனை', 'மணற்கோவில்' என்ற மகுடங்களில் வெளி வந்துள்ளன.

சு.வே. நாடகங்கள் சிலவற்றையும் எழுதி நாடகத் துறையில் தடம்பதித்தார். 'வஞ்சி', 'எழிலரசி', 'மண்வாசனை' என்பன சு.வேயின் நாடகங்களுள் குறிப்பிட்டாக வேண்டிய சில.

சு.வே. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கடமையாற்றிய வேளை பல பாடநூல்களையும், ஈழகேசரியாரின் அரவணைப்பில் இருந்தவேளை 'சந்திரமதி', 'குகன்' போன்ற பாடநூல்களையும் ஆக்கியுள்ளார். இவர் வானொலியில் தொடர்ந்து பல வாரங்கள் தொடர் இலக்கிய உரைகளை நிகழ்த்தியமை பெருமையுடன் குறிப்பிடவேண்டிய இன்னொன்று.

இப்படியும், இன்னும் பல்வேறு வகைகளிலும் ஈழத்தமிழ் இலக்கியத்துறைக்கு வளமும் வலுவும் சேர்த்தவரும் உருவகக் கதையின் பிதாமகனுமாகிய சு.வே. அவர்கள் 86 வயதில் (24.05.1921 - 22.06.2007) மண்ணுலகைப் பிரிந்தவராயினும், ஈழத் தமிழ் இலக்கிய உலகில் என்றென்றும் நிலையாக நிமிர்ந்து வாழ்வார்.

# அவர் எழுத்தும் பெயரும் என்றும் வாழும்

- ம. வ. கானமயில்நாதன் -
பிரதம ஆசிரியர், உதயன் - சஞ்சீவி

நெற்றியில் அழகிய வட்டச் சந்தனப்பொட்டு. வாயில் தாம்பூலம் தரித்த சிவப்பு. காணும்போதெல்லாம் புன்சிரிப்புடன் கடந்து செல்வார். வேட்டியுடன் கட்டக்கை சேர்ட்.

கொழும்பு வெள்ளவத்தை பசல்ஸ் ஒழுங்கையால் பேருந்துக்கு அல்லது சந்தைக்குச் செல்லும்போது அவரைக் காண்பதுண்டு. இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று எண்ணுவதுண்டு. ஆனால், அவரை வழிமறித்து அதனைக் கேடக வேண்டும் என்ற உந்துதல் இருக்கவில்லை.

ஒருநாள் வழமைபோல தினபதி- சிந்தாமணி அலுவலகத்தில் கடமைக்கு அமர்ந்தேன். அதே போவழி. அடிக்கடி அந்த ஒழுங்கையில் காணும் உருவம். சிந்தாமணி ஆசிரியர் பெருந்தகை இராஜ அரியரத்தினம் ஐயா அவர்களின் மேசைக்கு முன்னால் அமர்ந்திருந்தார். இருவரும் பேசிக்கொண்டனர்.

இவர் ஓர் இலக்கியக்காரனாகத்தான் இருக்க வேண்டும். அரியரத்தினம் ஐயாவிடம் கேட்க வேண்டும். திடீரென ஒரு தவிப்பு. அவரது மேசைக்கு அருகில் சென்றேன். 'தம்பி, உம்மை நான் அடிக்கடி கண்டிருக்கின்றேன். நீரும் இங்குதான் வேலை செய்கிறீரோ' என்றார். அன்றுவரை நான் அடையாளம் கண்டு கொள்ளாத மூத்த எழுத்தாளர்களில் ஒருவர்.

சிந்தாமணி ஆசிரியர் இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தினார். நான் எனது பணிக்கு; வந்தவர் சென்று விட்டார்.

அவர் சென்ற பின்னர், அவர்தான் சு.வே. என அறிந்து கொண்டேன். 'கலைச்செல்வி' யில் அவரது கதைகளை வாசித்த ஞாபகம் வந்தது. இலங்கையில் தமிழ் இலக்கியத் துறையில்

உருவகக் கதையின் பிதாமகன் சு.வே.தான் என்ற விவரங்கள் எல்லாவற்றையும் இராஜ அரியரத்தினம் ஐயா சொல்லக் கேட்டேன்.

அப்போது இன்னுமொரு பழைய ஞாபகம் வந்தது. யாழ்ப் பாணத்தில் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றியபோது உருவகக் கதை எழுத வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அப்போது வாரமலருக்குப் பொறுப்பாக இருந்த பழம்பெரும் எழுத்தாளர் அ.செ.மு.விடம் ஒரு கதையை எழுதிக் கொடுத்தேன். படித்துப் பார்த்தார். 'கானம் நன்றாக இருக்கிறது. தொடர்ந்து எழுது. சு.வேயின் கதைகளைப் படித்துப் பார். உச்சமான எழுத்தாளர் அவர் என்றார். அவ்வாறே செய்தேன். ஆனால், சு.வே.யை நேரில் கண்டதில்லை.

கொழும்பில் தினபதி-சிந்தாமணி அலுவலகத்தில் சந்தித்த பின்னர் - பலப்பல வருடங்களுக்குப் பின்னர், அவர் பணியில் இருந்த ஓய்வுபெற்ற பின்னர் ஒரு நாள் நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோயிலடியில் சந்தித்தேன். ஓடிச்சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். என்னைப் பற்றிய விபரம் எல்லாவற்றையும் நான் எதுவும் கேட்காமலே மளளவென்று அவிழ்த்து விட்டார். உதயன்-சஞ்சீவி பத்திரிகைகள், நீர் எஸ்.டி. சிவநாயகத்தின் சீடன் என்று முத்திரை குத்தினாற்போல் சொல்கின்றன என்றார். சஞ்சீவிக்கு உருவகக் கதை எழுதித் தருமாறு கேட்டேன். பாடப் புத்தகங்கள் சிலவற்றை ஒரு பதிப்பகத்துடன் சேர்ந்து வெளியிடும் பணியில் ஈடுபட்டிருப்ப தாகவும் அது பெரும் பளுவாக உள்ளதால் அது நீங்கியதும் எழுதுவதாகக் கூறினார்.

அவரது பளு நீங்கியதோ இல்லையோ சில மாதங்களில் 'சஞ்சீவி' யும் உதயனுடன் சேர்த்து அரசாங்கத்தினால் சீல் வைத்து மூடப்பட்டது. அதற்கிடையில் அவர் கதை தந்து சஞ்சீவியில் வெளியிட்டோமோ என்ற சரியான ஞாபகம் இப்போது மனதில் தட்டவில்லை.

இலக்கியக் கூட்டங்களிலும் ஆலயங்களிலும் சந்திக்கும்போது அவரைக் கண்டுவிட்டால் ஒரு ஐந்து நிமிடமேனும் அவருடன் கதைக்காமல் செல்வதில்லை. அன்றலர்ந்த தாமரை போன்ற முகம். புன்சிரிப்பும் பொட்டும் இன்றும் மறக்க முடியாதவை.

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 'சூரிய காந்தி' யில் முத்தான மூத்தவர்கள் என்ற பகுதியை ஆரம்பித்தோம். பழைய தலைமுறையினரைப் புதிய சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தும் ஒரு பகுதி அது.

அந்த வரிசையில் இரண்டாவது மூத்தவராக சு. வேயைச் சேர்க்க வேண்டும் என்று எண்ணினேன். அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால் இயலவில்லை.

அந்தச செவ்விகளைச் செய்து தந்த திரு. இயல்வாணன் இரண்டு தடவைகள் நாவற்குழி சென்று வந்தார். செவ்வி பெற இயலவில்லை. சற்றுச் சுகமடைந்தார் எனத் தகவல் கிடைத்தது. அடக்கமே உருவாக இருந்த அவரை இளம் எழுத்தாளர்களுக்கு மட்டுமின்றி ஏனையோருக்கும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பதால் மீண்டும் மீண்டும் திரு இயல்வாணனைக் 'கலைத்தேன்'. நோயிலிருந்து முற்றிலும் விடுபடாத நிலையில் அவரை ஒரு செவ்வி கண்டு வெளியிட்டோம்.

அந்தச் செவ்வியில் அவரது முழு ஆளுமையை வெளிப்படுத்த முடியவில்லையே என்ற கவலை மனதை வலிக்கச் செய்தது.

ஆனால் இப்போது....

அப்போது அவரது செவ்வியை வெளியிட்டதால், தன்னை முதன்மைப்படுத்திச் சுய விளம்பரம் தேடாத ஓர் அற்புத எழுத்தாளனை உதயன் கௌரவித்தான் என்ற திருப்தி மனதை நிறைய வைக்கிறது.

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் எழுத்தும் பெயரும் என்றென்றும் வாழும். இதனைவிட வேறு என்ன சிறப்பு வேண்டும் ஒரு மனிதருக்கு....?!

---

பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகுதான் சிறிய உண்மைகள் புலப்படுகின்றன.

- பாரதியார்

# நீங்கள் வரவேண்டும்



சின்ன வயதில் எம்மைத் தூக்கி
செல்லமாக மடியில் வைத்து
பிஞ்சு விரலைப் பிடித்தெழுதி
ஏடு தொடக்கி வைத்த எங்கள்
சு.வே. தாத்தா எங்கே எங்கே
சுந்தரமாக வாய் திறந்து
சொல்லித் தந்த தமிழ் எமக்கு
இந்த நாளும் நினைவினிலே
இருக்குதெங்கள் தாத்தாவே!
நல்ல தமிழ் தேடிப் பலர்
நாடியும்மிடம் வரும்போது
இல்லையென்னாது இலக்கியமும்
இலக்கண விளக்கமும் சொல்வீரே
வெல்லம் போன்ற எங்கள் தமிழ்
வேண்டாம் என்று புறந்தள்ளி
தொல்லை மொழிகள் உட்புகுத்தி
பல்லைக் காட்டும் பரிதாபம்
பார்க்க நீங்கள் வரவேண்டும் - எங்கள்
பாடப்புத்தகம் தொடங்கி பத்திரிகை ஈறாக மொழி
போடும் கூத்தைப் பார்க்க நீங்கள் வரவேண்டும்
பைந்தமிழ் செந்தமிழ் படும்பாட்டை
பார்க்க இங்கே வரவேண்டும்.

ஜெ. சுவர்ணேஷ்
தரம் - 5
இந்து ஆரம்பப் பாடசாலை
யாழ்ப்பாணம்

## சு. வேலுப்பிள்ளை மறைந்தார்

இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பி.சி. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 7.30 முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் 'காலைக்கலசம்' நிகழ்ச்சியில், 'இலக்கியத் தகவல் திரட்டு' என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00 மணி வரை சுமார் 15-20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்த வாராந்த நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதி இதுவாகும்.

---

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் நிகழ்ச்சிகளை தவறாமல் கேட்டுக் கொண்டிருக்கும் அறிவார்ந்த நேயர்களுக்கு முதலில் என் அன்பு கலந்த வணக்கம். மீண்டும் இந்த வாரம் மற்றுமொரு காலைக்கலசம் நிகழ்ச்சியில் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத்து இலக்கியத்துறையில் குறிப்பாக உருவக் கதையின் பிதாமகர்என்று அறியப்பட்ட சு.வே. அவர்கள்கடந்த22ஆம் திகதி (22.06.2007) அன்று தனது 86 ஆவது அகவையில் அமரத்துவமடைந்துவிட்ட செய்தியை கடந்த வாரம் நேயர்களுடன்பகிர்ந்து கொண்டேன். இன்று அமரர் சு.வே. பற்றிய மனப் பதிவுகளை மீண்டும் ஒரு முறை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். 2003 ஆம் ஆண்டில் ஒருதடவை இவரது 'பாற்காவடி' என்ற நூலை ஐபீசி காலைக் கலசத்தின் வாயிலாக அறிமுகம் செய்திருந்ததை நினைவு கூர்ந்து கொள்ளக்கூடும்.

1921ம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி, சுப்பிரமணியம் - தையல்நாயகி தம்பதியினருக்கு மகனாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாவற்குழியூரில் பிறந்த வேலுப்பிள்ளை ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவர். இலக்கிய உலகில் சு.வே. என்று சுருக்கமாக அழைக்கப்பட்டவர் இவர்.

சு.வேயின் படைப்பாற்றலைப் புடம்போட்டு ஒளிர வைத்தது திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கல்லூரியாகும். 1939 இல் இக்கல்லூரி மாணவனாகச் சேர்ந்த சு.வே. 1942 இல் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக வெளியே வந்தார். சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற பின்னர் இவர் 1946 முதல் 1981 வரை ஹற்றன், டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தார். திருமண பந்தத்தில் ஈடுபடாது தன் வாழ்வில் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து, கல்விக்கும் இலக்கியத்துக்கும் முழுநேரப் பணியாளனாக வாழ்ந்து முடித்தவர் அமரர் வேலுப்பிள்ளை.

திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கல்லூரி உருவாக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மூத்த படைப்பாளி சம்பந்தன், இரசிகமணி கனக செந்திநாதன் போன்றோரின் தடத்தில் சு.வேயையும் அந்தக் கல்லூரி புத்திலக்கியப் படைப்பாளியாக ஈழத்துத் தமிழிலக்கியத்துக்கு வழங்கியிருந்தது. அத்தோடு ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் கற்றுத் தமிழ்ப் பண்டிதராகவும் இவர் விளங்கினார். பண்டைய தமிழ் இலக்கியங்களை அவர் தெரிந்து வைத்திருந்தது போலவே நவீன தமிழிலக்கியங்களையும் அவர் ஆழமாகத் தெரிந்து வைத்திருந்தார் என்பதற்கு அவர் படைத்த நவீன ஆக்கங்கள் பல சான்றாக உள்ளன. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வழியாக யாழ்ப்பாண மண்ணிலே விளைந்த செழுமைத் தமிழை நவீன படைப்பிலக்கியத்திலே புகுத்திய மூலவர் என்று அறிஞர்களால் போற்றப்படுபவர் சு. வேலுப்பிள்ளை அவர்களாவர்.

1943இல் சிறுகதைத் துறையினுள் புகுந்த இவர், ஈழகேசரிப் பண்ணையில் முகிழ்த்த முன்னோடிச் சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்டார். 1943இல் ஈழகேசரியில் வெளியான 'கிடைக்காத பலன்' என்ற சிறுகதையே இவரது முதலாவது இலக்கியப் பிரவேசமாயிற்று. அதன் தொடர்ச்சியாக 'மனித மிருகம்', 'புத்தனின் சுவடு', 'காலத்தின் தண்டனை', 'பாசம்', 'பிரேமை', 'மனநிழல்', 'அன்புக்கறை', 'சிற்றன்னை', 'தோழன்' ஆகிய சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதிப் பிரபல்யம் பெற்றுக் கொண்டார்.

உருவகக் கதையின் பிதாமகர் என்று வழங்கப்படும் இவரது ஆரம்பகால உருவகக் கதைகள் மறுமலர்ச்சி இதழ்களில் வெளிவந்துள்ளன. 'மணவாசனை', 'வெறி', 'பாரிசவாதம்', 'பூ', 'பாற்காவடி', அக்கினி', ஸ்ட்ரைக்', புகை', தகிப்பு', தெய்வம்', 'பெரியம்மா' என்பன பின்னாளில் பல்வேறு ஊடகங்களிலும் வெளிவந்து பதிவு பெற்ற சு.வேயின் கதைகளாகும். சு.வே.யின் கதைகள் தொகுக்கப்பெற்று 'மண்வாசனை', 'பாற்காவடி' ஆகிய இரு தலைப்புகளில் வெளிவந்துள்ளன. இவரது உருவகக் கதைகளின் தொகுப்பாக தனிநூலொன்று 'மணற்கோயில்' என்ற தலைப்பில் வெளிவந்திருக்கின்றது. இந்நூலின் தலைப்புக் கதையான மணற்கோயில் முதலில் கலைச்செல்வி சஞ்சிகையில் வெளிவந்திருந்தது. இச்சஞ்சிகையின் ஆசிரியர் சிற்பி சரவண பவன், வழமை போலவே தனது கலைச்செல்வி இதழை தமிழக அறிஞர் ராராஜிக்கு தபாலில் அனுப்பி வைத்திருந்தார். ராஜாஜி கலைச்செல்வியில் வெளிவந்திருந்த சு.வே.யின் 'மணற்கோவில்' என்ற உருவகக் கதையை வாசித்துவிட்டு அவருடன் தொடர்பு கொண்ட வேறு தமிழக அறிஞர்களிடம் விதந்து பாராட்டியிருந் தார். இச்செய்தியை 'கலைச்செல்வி' ஆசிரியர் திரு சிற்பி சரவணபவன் வாயிலாக அறிந்து ஞானம் ஆசிரியர் அவர்கள் தனது 'ஞானம்' இதழ் ஒன்றில் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

செங்கை ஆழியான் தொகுத்த ஈழகேசரிச் சிறுகதைகள் என்ற நூலிலும், மறுமலர்ச்சிக் கதைகள் என்ற நூலிலும் சு.வே.யின் கதைகள் சில இடம்பெற்றுள்ளன. மனிதனின் சிந்தனைகளைத் தூண்டி உணர்ச்சிகளைத் தொடுவதுடன் அவனது பாவனா சக்தியைமிகுதிப்படுத்துவதாயும் மனதுக்கு இன்பம் அளிப்ப தாயும் அமைவதே இலக்கியம் என்பது படைப்பிலக்கியம் பற்றிய சு.வேயின் கருத்தாகும். சு.வேயின் சிறுகதைகளின் தனிச்சிறப்பு என்னவென்றால், அவரது கூர்மையான அவதானிப்பு, கதைகளின் வசனங்கள் தோறும் பிரதிபலிப்பதாகும். அத்துடன் சுவையான வர்ணனையும், மானுட நேயத்தைத் தூண்டும் கருத்துக்களும் இவரது படைப்புக்களில் விரவிக் காணப்படுகின்றன.

சு.வேயின் கதைகள் வெறும் கற்பனாவாத பிரசவங்கள் அல்ல. அவை இந்த மண்ணின் வாழ்வையும் வளத்தையும் அவலத்தை யும் ஆழமாகப் பேசுவன. இவை யதார்த்தப் படைப்புக்கள்,

தேசிய இலக்கியம் என்பதற்குத் தக்க எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

சு.வே. தன் சிறுகதைகளில் தாயகத்தையும் அதில் வாழ்ந்து வரும் மக்களை மட்டுமே சித்திரித்துள்ளார் என்பது மிக முக்கிய மான விடயம். நவீன சிறுகதையின் அழுத்தமான பண்பினைக் கொண்ட மண்வாசனைக் கதைகளே அவருடையவை என்று சொல்லலாம். அவரது கதைகளில் அது ஆக்கப்பட்ட ஒவ்வொரு காலகட்டத்தில் காணப்பட்ட எரியும் பிரச்சனைகளே பேசப்பட்டி ருக்கின்றன. 1949 இல் ஈழகேசரியில் வெளியான 'காலத்தின் தண்டனை' என்ற கதையில் இரண்டாம் யுத்த காலத்தில் ஏற்பட்ட அரிசிப் பஞ்சம் பேசப்படுகின்றது. 1944 இல் ஈழகேசரியில் வெளியான 'மனித மிருகம்' என்ற கதையில் கோயில்களில் ஆடு கோழிகளைப் பலியிடும் மிலேச்சத்தனம் சிறப்பாகச் சொல்லப் படுகின்றது. தனது பிறந்த மண் இருப்பை அழித்துக் கொள்ள விழையும் பிள்ளைகள் பற்றி 'மண்வாசனை' என்ற கதை 1963 இல் 'கலைச்செல்வி'யில் பேசுகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடநூல் எழுத்தாள ராகவும் சிலகாலம் இவர் பணியாற்றியிருக்கின்றார். சு.வே. ஒரு நாடகாசிரியருங்கூட தமிழிலக்கியத்தில் பல்வேறு துறைகளிலும் ஆரோக்கியமாகக் காலடித்தடம் பதித்த கலைஞராக இவர் எம்மிடையே வாழ்ந்து சென்றிருக்கின்றார். 1965 இல் இலங்கை கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் 'வஞ்சி' என்ற ஓரங்க நாடகம் முதற்பரிசினைப் பெற்றது. அடுத்த ஆண்டில் 'எழிலரசி' என்ற முழுநீள நாடகம் முதற்பரிசினைப் பெற்றது. இலங்கை வானொலி நாடகப் போட்டியில் இவரது 'மண்வாசனை' 1960 இலும் ஒருமைநெறித் தெய்வம் என்ற நாடகம் 1968 இலும் பரிசு பெற்றன. சு.வே. பல தொடர் நாடகங்களை இலங்கை வானொலிக்கு எழுதி வழங்கியுள்ளார். 'ஏட்டிலிருந்து' என்ற நாடகம் 1964 இல் 16 வாரங்களும், 'கிராம ராச்சியம்' என்ற நாடகம் 1964 இல் 32 வாரங்களும், 'பொன்னாச்சிக் குளம்' என்ற நாடகம் 1967-68 களில் 97 வாரங்களும், 'நவயுகம்' 1969 இல் 12 வாரங்களும் ஒலிபரப்பாகியுள்ளன.

இலங்கை வானொலியுடனான சு.வேயின் தொடர்பு வானொலி நாடகங்களுக்கு அப்பால் இலக்கிய உரைகளாகவும் தொடர்ந்தது. 1965 இல் 'இலக்கிய ரசனை' 32 வாரங்களும், 1968 இல் 'திருக்குறட் சித்திரம்' 36 வாரங்களும், 1969 இல் 'நாட்டுக்கு நல்லது' 24 வாரங்களும் ஒலிபரப்பாகியிருக்கின்றன.

சு.வே. தன் படைப்பாற்றலைச் சிறுகதை, உருவகக் கதை, இலக்கியக் கட்டுரைகள், நாடகம், வானொலி நாடகம், வானொலித் தொடர் நாடகம், உரைச்சித்திரம், பாடநூல்கள் எனப் பல்வேறு துறைகளிலும் ஆழமாயும் அகலமாயும் வெளிக் கொணர்ந்துள்ளார். சிறுவர் இலக்கியத்தையும் இவர் விட்டு வைக்கவில்லை. 'சந்திரமதி', 'குகன்' ஆகிய இரண்டு சிறுவர் இலக்கிய நூல்கள் ஈழகேசரி ந. பொன்னையா அவர்களால் பல பதிப்புக்களில் வெளியிடப்பட்டிருந்தது. அந்நாட்களின் தேசியப் பாடசாலைகளின் போட்டிகளில் பரிசுபெறும் மாணவர்களுக்கு இந்நூல்கள் பாடசாலை நிர்வாகங்களினால் பெருமளவில் வழங்கி ஊக்குவிக்கப்பட்டிருந்தன.

ஈழத்து யுத்தம் காரணமாக நாம் இழந்தவை உயிர்கள், சொத்துக்கள், விழுமியங்கள் மட்டுமல்ல மீளப் பெறமுடியாத ஆக்கவிலக்கியப் படைப்புக்களும்தான். நாவற்குழியில் மிக அவதானமாகப் பேணப்பட்டிருந்த சு.வே.யின் படைப்புக்கள் அவரின் சேகரிப்புக்கள் எல்லாம், ஈழத்தின் யுத்தம் காரணமாகத் தீயில் அழிந்தொழிந்து போனமை மிகவும் சோகமானதொரு செய்தியாகும்.

ஈழத்தின் பழம்பெரும் தமிழறிஞர்களைத் தேடிச் சென்று அவர்கள் பற்றிய தகவல்களைத் தேனீ போலச் சேகரித்து அதை தனது 'ஞானம்' இதழ்களில் ஆவணமாக்கி வருபவர் தமிழறிஞரும் படைப்பாளியுமான தி. ஞானசேகரன். அவரது பெப்ரவரி 2007க்கான 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை இதழில் ஈழத்துப் படைப்பிலக்கியவாதியாக நம்மிடையே வாழ்ந்திருந்த சு. வேலுப்பிள்ளை அவர்கள் பற்றிய அட்டைப்படக் கட்டுரையைப் பிரசுரித்து அவர் வாழும்போதே கௌரவித்திருக்கின்றார்.

சு.வேயின் சிறுகதைகள் நூலுருவில் தொகுக்கப்பட்ட முதல் முயற்சியொன்று 1972இல் நடந்திருக்கின்றது. 12 சிறுகதைகள் அன்னை வெளியீடாக திருமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருந்தது. அச்சிறுகதைகளும் ஏனைய எட்டுச் சிறுகதைகளும் சேர்ந்து 'பாற்காவடி' என்ற தலைப்பில் பின்னர் வெளியிடப் பட்டுள்ளது. சு.வேயின் மற்றைய கதைகளைத் தேடிப் பெற்று நூலுருவாக்கும் முயற்சிகளை தாயகத்தில் உள்ள ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய அமைப்புகள் ஆகியவை முன்வர வேண்டும் என்பதே எங்கள் அவாவாகும். தொகுப்புப் பணிகளை அவர்கள் முன்னெடுக்கும் பட்சத்தில் அதற்கான நிதி உதவிகளை வழங்கப் புலம்பெயர் நாடுகளில் உள்ள அறிவுஜீவிகள் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள்.

வணக்கம்.

---

சத்தியம் என்பது எங்கோ வெளியில் இல்லை. நம்முள்தான் உறைகின்றது. தர்மம், அதர்மம் கூட நம்முள்தான் இருக்கின்றன. நமது ஆத்ம திருப்திக்காகச் செய்யும் காரியமே தர்மம். மனச்சாட்சிக்கு எதிராகச் செய்யும் காரியம் அனைத்தும் அதர்மம். இவற்றைக் கண்டுகொள்ள நீ எந்தப் புத்தகத்தையும் தனியாகப் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

- சாயி சாகர முத்து

---

# வாழ்வு நிறைவுச் செய்தி

- திரு. கு. சிதம்பரநாதன் -

வயலும் கடலேரியும், கோயில்களும், தோட்டங்களும் பனந் தோப்புக்களும் சூழ்ந்து இயற்கை எழில் பொங்கும் நாவற்குழி என்னும் ஊரில் பிறந்து வாழ்ந்தவரும் கற்றோரால் சு.வே. என்றும் பண்டிதர் வேலுப்பிள்ளை என்றும் உற்றார் உறவினரால் சந்தணம் என்றும் அழைக்கப்பட்ட 'பெரியப்பா' பற்றிச் சொல்ல விளை கின்றேன்.

'தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்னும் குறளுக்கு சு.வே. அவர்களே பொழிப்புரை. செந்நிற மேனி, சிரித்த முகம், நெற்றியில் நீறு, சந்தணப் பொட்டு, அவரது உடைகள் போலவே வெள்ளை உள்ளம். யாரையும் வசீகரிக்கும் பேச்சு. அடுத்தவரில் அன்பும் அக்கறையும் கொண்ட விசாரிப்புகள். இவையே சு.வே யின் குறியீடுகள்.

எளிய மொழிநடை, இயல்பபான பேச்சு, பேச்சுவழக்கில் கூட பிசிரில்லாத உச்சரிப்பு இடையிடையே இழையோடும் இலக்கியப் புலமையை வெளிப்படுத்தும் வாசகங்கள். இவை அவரது தமிழ்ப் புலமைக்குச் சான்றாகும்.

பழந்தமிழ் இலக்கண நூல்களில் வாசித்து விளங்குவதில் சிக்கலாகவுள்ள இலக்கண, இலக்கிய விடயங்களையும் கூட எளிய நடையிலும், குறிப்பாகப் பள்ளிச் சிறார்களுக்குக்கூட விளங்கக் கூடிய வகையில் சொல்ல முடிந்தமைதான் அவரின் மொழி யாற்றலின் வெற்றி என்றால் அது மிகையல்ல.

கல்வியென்பது அறிந்து கொள்வது மட்டுமல்ல. அறிந்தவற்றை எளிமையாக அடுத்தவருக்குக் கூறக்கூடிய ஆற்றலையும்

உள்ளடக்கியதாகின்றது. அல்லது அக்கல்வி காலவோட்டத்திற்குத் தேவைதானா? என்ற சந்தேகத்தைக் கொண்டிருக்கும்.

**'தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்'**

என்ற பொய்யாமொழிக்கிணங்க தாம் கற்றறிந்த அனுபவித்த விடயங்களைஅடுத்தவருக்குக்கூறி அவர்களைச்சந்தோசப்படுத்தி தாமும் இன்புற்றிருந்த ஒருதமிழறிஞர்சு.வே.

அவரது தமிழ்ப் புலமை அவரை ஆசிரியத் தொழிலிலிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கான தமிழ்ப் பாடநூல்களை எழுத அழைத்துச் சென்றது. இதனால் தன்னுடைய காலத்தில் பாடசாலை மாணவருக்காக எழுதப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திற்கான நூல்களை எழுதுவதில் காத்திரமான பங்களிப்பை வழங்கக்கூடிய ஆளுமையை அவர் கொண்டிருந்தார். அக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் மொழிக்கான பாடநூல்களில் அவரது இலக்கண, இலக்கியச் செழுமையைக் காணலாம். அவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கணம் மற்றும் வினாவிடைகள் அவர் தமிழ் மாணவர்களுக்கு வழங்கிய அரிய பொக்கிசங் களாகும். காலம் கடந்தும் அவை தமிழ் மொழி பயிலும் மாணவர் களுக்கு ஆசானாகச் செயற்படக்கூடியன.

பண்டிதர் சு.வே. அவர்கள் ஈழத் திருநாட்டில் ஒரு மூத்த எழுத்தாளர். யதார்த்தத்தையும் கற்பனையையும் சேர்த்து இலகு தமிழில் இனிய நடையில் எழுதுமாற்றல் மிக்கவர். சிந்தனையை மென்மையாகத் தூண்டும் பண்பு அவரது எழுத்துக்களின் தனித்துவமாகும். கருத்துக்கள் மட்டுமல்ல கவின் தமிழும் கலந்தெழுதும் ஆற்றல் கைவரப்பெற்றவர். சிறுகதைகள், உருவகக் கதைகள், நாடகங்கள் என அவரது சிந்தனையும் கைவண்ணமும் நீண்டன.

மொழியை, மொழியாற்றலை தனது பெருமையைப் பறைசாற்றவும் தொழிலுக்காகவும் மூலதனமாகப் பாவிக்கும் நோக்கமும் தேவையும் அவருக்கு இருந்ததில்லை. அதே

மொழியினூடாக அடுத்த சமூகத்திற்குப் பண்படுத்தியெடுக்கின்ற சொல்லேருழவனாக்ச் செயற்பட்டார் என்பதே பெருமைக்குரிய தாயிற்று.

நல்லதொரு கூட்டுக் குடும்பத்தை வழிநடத்தும்
தலைவனாக அவர் வாழ்ந்தார்.

'.......... உற்றுளி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்கை நன்றே.....'

என்ற பழந்தமிழ் இலக்கியத்திற்கமைய தனது பெறாமக்கள், மருமக்கள் மட்டுமல்ல மற்றும் உற்றார், ஊரவர்க்கும் கல்வி கற்க உதவ அவர் பின்னிற்கவில்லை.

தன்னைவிட அடுத்த சந்ததி மாணவர்கள் அறிவறிந்த கேண்மை யுடையவராதலை அவர் விரும்பினார் என்பதுதான் பெருமைக்கு உரியதாயிற்று.

பெருமையை எண்ணிப் பிரிவை மறப்போம்.

சாந்தி!

---

பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.

- இராமகிருஷ்ணர்

மனிதன் கடைத்தேறுவதற்குப் பல விதிகள் இருக்கின்றன. அவற்றில் ஒரு வழி முக்கியமானது. அது தன்னைத்தானே சோதனை செய்து கொள்வதாகும்.

- கிருபானந்த வாரியார்

---

## உருவகக் கதையின் பிதாமகர்

- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் -
காரியதரிசி, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை,
உரும்பிராய்

நாவலர் பெருமான் பேர்சிவல் பாடசாலையில் (இப்பொழுது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஏழு ஆண்டுகள் படித்தவர். ஏழு ஆண்டுகள் அங்கே ஆசிரியராகவும் இருந்தவர். பதினான்கு வருடம் கிறிஸ்தவ சூழலில் வாழ்ந்த நாவலர் பெருமான் உள்ளத்தில் சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிலேயே படிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது. 1848 ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையிலே ஒரு பாடசாலையை நிறுவி அப் பாடசாலைக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயருஞ் சூட்டினார். கற்பிப்பதற்கு கற்று வல்ல உபாத்தியாயர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டார்.

'நாவலர் கருத்தாகிய வித்து காரைநகரிற் பிறந்த அருணாசலம் என்கின்ற மகான் ஒருவரின் முயற்சியால் முளைகொண்டு 1925 ஆம் ஆண்டு சைவவித்தியா விருத்திச் சங்கம் என்கின்ற கற்பக தருவாயிற்று. சைவ வித்தியா விருத்திச் சங்கம் சைவாசிரிய கலாசாலை மூலம் ஆயிரக்கணக்கில் சைவ ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் தோற்றுவித்து நூற்றெண்பதுக்கு மேற்பட்ட பாடசாலைகளை ஆங்காங்கே ஸ்தாபித்தும், எத்தனையோ சைவப் பாடசாலைகள் தோற்றுவதற்கும் வழி செய்தும், உன்னதமான சைவ அநாதசாலையைத் தாபித்தும், சைவப் பிள்ளைகளைத் தனது சொந்தச் சமயத்தை அறிதற்கு வழி செய்திருக்கின்றது' என்ற கருத்தினை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு கட்டுரை மூலம் தெரிவித்திருக்கின்றார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் சைவப் பாடசாலைகளை நிறுவியதுடன் கற்று வல்ல உபாத்தியாயர்களைச் சைவ உலகுக்கு அளிப்பதற்கு வாய்ப்பாகத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையையும் தாபித்தது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதுகெலும்பெனத் திகழ்ந்தவர் இந்துப்போட் சு. இராசரத்தினம் அவர்கள். தன்னல மற்ற சேவையால் 'நாவலருக்குப் பின் நமக்கோர் காவலர் ஆனார் இந்துப்போட் சு. இராசரத்தினம் அவர்கள்.'

தன்னிகரற்ற திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய பழைய மாணவர்களில் மிகவும் மூத்தவர் நாவற்குழியூர் பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை வளாகத்தில் ஒருபால் காவிய பாடசாலையும் அமைந்திருந்தது. பண்டிதமணி அவர்களே காவிய பாடசாலையின் மேற்பார்வையாளராக இருந்தார். சமஸ்கிருதம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளும் கற்பிக்கப்பட்டன. இக்காவிய பாடசாலை மும்மொழிப் பல்கலைக்கழகம் என அப்பொழுது திகழ்ந்தது. காவிய பாடசாலையின் கல்வி வாசனையை நன்கு அனுபவித்தவர் சு.வே. அவர்கள். காலகதியிற் பண்டிதருமானார்.

பெருமதிப்பிற்குரியவரான மயிலிட்டி திரு சி. சுவாமிநாதன் (பீ.ஏ) அவர்கள் சைவாசிரிய கலாசாலையின் அதிபராக இருந்தார். அளவெட்டி தந்த அறிவுச் செல்வமாக விளங்கியவரான திரு. பொ. கைலாசபதி அவர்கள் உபஅதிபர். பண்டிதமணி அவர்கள் தமிழ்த்துறை தலைவர். திரு சுவாமிநாதன் அவர்களிடத்தில் மிக்க மரியாதையுடையவர் சு.வே. அவர்கள். உபஅதிபர் பொ.கை., பண்டிதமணி இருவரிடத்திலும் அளவிறந்த பக்தி கொண்டவரான சு.வே. அவர்கள் இருவரையும் அடிக்கடி சந்திக்க முயன்றதுண்டு.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்திருந்த பண்டிதமணி அவர்களது குடிலுக்கு வருவார் சு.வே. அவர்கள். குடிலின் முகப்பு விறாந்தையில் பண்டிதமணி அவர்கள் இருப்பார். பண்டிதமணி இரும் இரும் என்று சொன்னாலும் இருக்காமல் விறாந்தை வளையைக் கையாற் பிடித்தபடியே நிற்பார். தமக்குள்ள சந்தேகங்களைத் தமது குருநாதரிடம் கேட்டுத் தெளிவார் திரு சு.வே. அவர்கள்.

எதையும் அர்த்தமுடன் எழுதும் இயல்புடையவர் சு.வே. அவர்கள். பண்டிதமணி நினைவு மலரில் 'பண்டிதர் ஐயா' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார்.

“உவகைச்சுவை வேந்து : உள்ளார்ந்த மகிழ்வுக்கு உவகை என்றும் பெயர். பண்டிதமணி ஐயா நல்லாய்ப் பகிடி விடுவார் என்பது வெகுசன வாக்கெடுப்பு. கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் அவை சிரித்திரன் பகிடிகளல்ல. பலவேளை பலருக்கு அவர் விடும் பகிடி விளங்காது. சிலவேளை சிலருக்கு விளங்கும். சிலவேளை அந்தச் சிலருக்கும் உடனே விளங்காது. நாலு நாள் கழித்துத்தான் விளங்கும். விளங்கும்போது மனம் நிறையும்; சிரிக்கும்.” என்று குறிப்பிட்டுள்ளார்கள். எடுத்துக்கொண்ட பொருள் வாசகர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் எழுதுவதில் சு.வே. அவர்கள் வெகுசமார்த்தர்.

சு.வே. அவர்கள் மாணவர்களுக்கும் எழுதினார். ‘கட்டுரை மஞ்சரி’ என்ற நூலை மேல்வகுப்பு மாணவர் மிகவும் விரும்பிப் படித்தார்கள். பலரும் பரீட்சைக்குத் தோற்றி, தமிழ்மொழியில் விசேட சித்தியைப் பெற்றார்கள். மாணவர்களுக்குப் பயன்படத் தக்க வகையில் வேறு பல நூல்களையும் எழுதினார்.

இவரது எழுத்து முயற்சிக்குக்கைகொடுத்து உதவிய ஸ்தாபனம் ஈழகேசரி ஆகும். ஈழகேசரிக்குப் பின் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பயன்பெறும் கட்டுரைகளை எழுதியுள்ளார். உருவகக்கதையின் பிதாமகர் என்று நாடு போற்றக்கூடிய அளவுக்கு எழுதினார். அவர் எழுதிய மணற்கோயில் என்ற கதை வெகு பிரசித்தமானது.

முத்தான மூத்தவர்கள் (உதயன்) அறிமுக வரிசையில் உருவகக் கதை ற்றிய தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

‘எமது மண்ணின் நிலைக்களனில் நேர் பொருளிற் கூறமுடியாத வற்றை உருவகப்படுத்திக் கூறுதற்கு நான் முயன்றேன். இதுவே எனது உருவகக் கதையின் தோற்றத்திற்குக் காரணம்’ என்றார்.

பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் அவர்களும் சு.வே. அவர்களும் பாடநூற் பிரசுரசபையில் சில காலம் அங்கம் வகித்து எழுதிக்கொண்டு இருந்தார்கள். இவர்கள் இருவரும் பண்டித மணியின் இரட்டையர்கள் என்று பிரஸ்தாபிக்கப்பட்டார்கள்.

வாழ்க்கையில் ஆயிரம் பிறை காணும் பாக்கியம் ஒருவருக்குக் கிடைக்குமானால் அவர் பெரும்பேறு பெற்றவர் என்பார்கள். ஆயிரம் பிறைகளைக் கண்ட பெருமையைப் பெறுகின்றார் சு.வே. அவர்கள்.

# நினைவுச்சரம்

- வ. பத்மநாதன் -
மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

நினைவுகள் மனதில் பசுமையையும் சில தருணங்களில் நெகிழ்வினையும் ஏற்படுத்துகின்றன. இவ்வகையில் மனதில் நீங்காத இடத்தினைக் கொண்டுள்ளவர் எனது அன்பிற்கும் கௌரவத்திற்கும் உரிய தமிழ் பண்டிதரும், சிறந்த புனைவு இலக்கிய கர்த்தாவுமான திரு சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்கள்.

இவரை முதன்முறையாக 1973ம் ஆண்டு ஈழத்துச் சோமு என்று அழைக்கப்படும் திரு நா. சோமகாந்தன் அவர்களது வீட்டில் சந்திக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அக்காலப் பகுதியிலிருந்து அடிக்கடி அவருடனான தொடர்பினை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் உருவாகத் தொடங்கியது. 1980ம் ஆண்டு எனது உத்தியோக இடமாற்றத்தின் நிமித்தம் யாழ் மாவட்டத்திற்கு வந்தபோது நாவற்குழியில் திரு சு.வேயின் சகோதரி திருமதி முருகையா கண்மணி அவர்களின் வீட்டில் வசிப்பதற்கு இடம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். திரு சு.வே. அவர்கள் நாவற்குழியில் வசித்து வந்தமையினால் இவருடன் மிக நெருக்கமாகப் பழகுவதற்கான சந்தர்ப்பம் உருவாகியது. எனது பிள்ளைகளும் இவரைப் 'பெரியப்பா' என்று அழைக்கும் அளவிற்கு எமது குடும்பத்தாருடனான உறவு மிக நெருக்கமாக அமைந்தது எனலாம். இவ்வேளையில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் திரு. க. முத்துக்குமாரசாமி அவர்கள் அதிபராகப் பதவி வகித்த வேளையில் நான் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகப் பணிபுரிந்தேன். அப்போது திரு சு.வே. அவர்களுடன் சேர்ந்து பாடசாலை அபிவிருத்தி வேலைகளில் ஒன்றிணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளமுடிந்தது.

பாடசாலை சுற்றுமதில், குழாய் நீர்க் கிணறு அமைத்ததுடன் திரு சு.வே. அவர்களது அயராத தனி முயற்சியினால் 'கனகசபை செல்லப்பா திறந்தவெளி அரங்கு' என்பன இக்காலகட்டத்தில் உருவாகியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் எழில் மிகு அரங்கு இருக்கும் வரை திரு. சு.வே. அவர்களது பெயரும் நிலைத்து நிற்கும் என்பதையும் கூறிக்கொள்வதில் மிக மகிழ்வு கொள்கின்றேன். மற்றும் இலங்கையின் கல்விச் சேவையிலும், ஈழத்துப் புனைவு இலக்கியத்திலும் இவரின் பங்களிப்பு மிக உன்னதமான ஒன்றாகும். தமிழ்மொழியாற்றலை மாணவர்களுக்கு இலகுவான வகையில் கற்கும் விதத்தில் பாட செயல்நூல்களைத் தயாரித்து மாணவர் உலகிற்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். கல்வி, இலக்கியம் சார்ந்த அனுபவங்களினூடு சமூகத்தை, பிரதேசத்தை, மண்வாசனையுடனும் கலை அழகோடும் பதிவு செய்துள்ளதுடன் மனித நேயப் பண்புடன் தன் படைப்புக்கள் மூலம் பிரதிபலித்து வந்துள்ளார்.

அமரர் சு.வே. அவர்கள் இவ் உலகத்தை விட்டு நீங்கினாலும் அவரின் ஆளுமையும், மனிதப் பண்பும், உறவினைப் பேணும் தனித்துவமும் என் உள்ளத்தே நீங்காது நினைவுகளாக மிளிரும்.

அவரது ஆத்மா என்றென்றும் இறைவனுடன் கலந்து பேரின்ப நிலையை அடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனின் பாதக் கமலங்களை பிரார்த்தித்து, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் , உற்றார். உறவினர், அயலவர்கட்கும் எம்பெருமான் மனச்சாந்தியினை வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

# நாடறிந்த தமிழ்த்துறை வித்தகர் சு.வே.

- த. முத்துக்குமாரசாமி -
அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு-04

மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் தமது வாழ்நாளில் ஏதோ வகையில் வாழ்ந்து செல்கின்றார்கள். சிலர் தமது வாழ்நாளில் செய்த செய்கைகளால் உடலால் இறந்தும் என்றும் மக்கள் மனதில் உயிர்ப்புடன் இருக்கின்றார்கள். அந்த வகையில் அமரர் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்கள் மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

வெண்ணிற வேட்டி - வெண்ணிற அரைக்கைச் சேட் - நெற்றியில் விபூதி, சந்தனம் என்பனவுடன் கம்பீரமான முகப் பொலிவுடன் அவர் காணப்படும் உருவை நினைத்துப் பார்க்கின்றேன். எளிமையான அடக்கமான மனிதர், சிரித்த முகம், மற்றவர் மனம் நோகாத வகையில் கதைக்கும் சிறந்த உத்தமர், பண்புகளுடன் மற்றவருடன் பழகும் தன்மை, எளிய இனிய தமிழில் உரையாடும் சிறந்த ஆற்றல், சிறந்த தமிழ் ஆற்றல், தமிழில் ஏதாவது ஐயம் ஏற்பட்டால் அதைத் தீர்க்கக்கூடிய ஒரே பண்டிதர். இத்தகைய ஒரு சிறந்த உத்தமர் இன்று எம்மத்தியில் இல்லை.

அவர் எழுதிய எத்தனையோ தமிழ்ப் புத்தகங்கள் மாணவர் களின் அறிவுக் கண்ணைத் திறந்துள்ளன. பாடத்திட்டம் வந்த வுடன் புத்தகம் இல்லையே என்று ஏங்கும் ஆசிரியர், மாணவர்கட்கு அமரர் சு.வே. இன் புத்தகங்கள் ஒரு வரப்பிரசாதம். அவரது புத்தகங்களால் பயனடைந்த மாணவப் பரம்பரையினர் பலர்.

அவரது இலக்கிய, இலக்கணப் படைப்புகள் மட்டுமல்ல சிறுகதைகள் கூடப் பலரால் போற்றப்பட்டன. இந்திய முன்னாள் ஜனாதிபதி ராஜாஜியால் கூட அவரது எழுத்தாற்றல் பாராட்டப் பட்டது. அந்தளவுக்கு எளிய தமிழ், பாமரரும் படித்து விளங்கக் கூடிய எளிய வசனநடை, படிப்பவரைக் கவரும் வாக்கிய அமைப்புக்கள். இனிய தமிழை வடித்தெடுத்துத் தந்தது போன்ற

செந்தமிழ் ஆக்கங்கள் இத்தகைய ஒரு தமிழ்ப் பெரியார் இன்று எம்முடன் இல்லை.

நான் நாவற்குழி மகாவித்தியாலய அதிபராகக் கடமை ஏற்றுப் பதவி வகித்தபோது பாடசாலையுடன் இணைந்து சத்தமில்லாது பல செயற்பாடுகளை என்னுடன் இணைந்து செய்துள்ளார். இன்று நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நாவற்குழியூர் நடராசாவின் பெயரில் அமைக்கப்பட்ட திறந்தவெளி அரங்கு அமைய மூல காரணமாக இருந்து என்னுடன் செயற்பட்ட உத்தமர்.

பாடசாலையின் அபிவிருத்திகள் பலவற்றிற்கு நிதி திரட்ட முற்படும்போது என்னுடன் இணைந்து வயோதிப காலத்தைக்கூட பொருட்படுத்தாது மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து வந்து பலரிடம் உதவிகள் பெற்றதை நினைத்துப் பார்க்கின்றேன். பண்டிதர் சு.வே. யைக் கண்டதும் அவர் வரவேற்கப்பட்ட தன்மைகளை எண்ணிப் பார்க்கின்றேன். ஒரு சில செயலை செய்து விட்டு பெரிய சாதனை வீரர்களாக தம்மைக் காட்ட முற்படும் இந்த உலகில் அமரர் சு.வே. அவர்கள் ஆடம்பரமில்லாது அமைதியாகப் பல செயல்களில் ஈடுபட்டு மனநிறைவுடன் காணப்பட்ட நினைவுகளை எண்ணிப் பார்க்கின்றேன்.

வீட்டிற்குச் சென்றால் புத்தகமும் கையுமாக எப்போதும் காணப்படுவார். அல்லது பேனாவும் தாள்களுடனும் காணப் படுவார். அவரது ஓய்வே புத்தகத்துடனும் பேனாவுடனும்தான்.

சிறந்த அறிவுடன்கூடிய எளிய பேச்சுவன்மை, சிறந்த விமர்சகர், சிறந்த எழுத்தாளர் ஆகிய பல்வகைக் கோணங்களில் காணப்பட்ட அமரர் சு.வே. அவர்கள் கர்வம் இல்லாத ஒரு பண்பான அறிவு நிரம்பிய முகப்பொலிவுடன் காணப்பட்ட உத்தமர். இன்று அவர் இல்லையென நினைக்கும்போது - ஒரு சிறந்த தமிழ்மகன் இல்லை என எண்ணும்போது பெரும் வேதனையாக உள்ளது. விதியின் விளையாட்டிலிருந்து எவரும் தப்ப முடியாது. அதற்கு அமரர் சு.வே. விதிவிலக்கானவர் அல்ல. இருந்தாலும் அவர் பணியால் என்றும் வாழ்ந்துகொண்டிருப்பார். அவரது பிரிவால் தயருறும் அவரது உறவினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி அமைகின்றேன்.

# மறைந்தும் மறையாத சிற்பி

திருமதி வ. மேகலிங்கம் -

அதிபர், யாழ் / நாவற்குழி மகாவித்தியாலயம்

**அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம்**
**வாய்மையோடு ஐந்தம் சால்பூன்றிய தூண்.**

என்ற வள்ளுவரின் சான்றாண்மைக் குணங்களைத் தன்னகத்தே தாங்கிய பண்டிதர் சு.வே. அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாவற்குழி ஊரே கலங்கி நிற்கிறது.

அருளுக்கும் அன்புக்கும் அறிவிற்கும் அடக்கத்திற்கும் ஆலோசனைகளிற்கும் இனிமைக்கும் ஈகைக்கும் உரித்தான உத்தம புருஷனை இழந்த துயரச்சுமையில் ஆறுதல் பெற ஆதாரம் இன்றி அன்பர்கள் கதிகலங்கி நிலை குலைந்து அலைமோதி கண்ணீர் பூக்களை காணிக்கை செய்கின்றனர்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக அன்னார் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியவை. இலக்கணத்தோடு இணைந்த மொழி விருத்தியை மாணவர் மனதில் பசுமரத்தாணிபோல பதிய வைப்பதில் அவருக்கு நிகர் அவரே. நாவற்குழி ஊரை வெளியுல கத்திற்கு தெரியப்படுத்தியது அவரது இலக்கியப் படைப்புகள் என்றால் அது மிகையாகாது. நாவற்குழி என்றால் பண்டிதர் சு.வே. அவர்களைத் தெரியுமா? என்ற கேள்வி பிறக்கும். அவ்வாறான சிறப்புடைய பெருமகனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

எது எதனால் எப்போது நடக்க வேண்டுமோ அது அதனால் அப்போது நடக்கும் என்ற அர்த்தம் அடங்கிய அருள்வாக்குப் போலவே அன்னாரின் புனிதமான பிரம்மச்சரிய வாழ்வு நிறைவு பெற்று மகத்தான தூய ஆத்மாவானது பூவுலகில் இருந்து விடை பெற்று விட்டது. அன்னாரின் புகழுடல் என்றென்றும் நிலைத்து நிற்கும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக யாழ்/நாவற்குழி மகாவித்தியாலய சமூகம் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கிறது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## சான்றோன் எனத் திகழ் சு.வே.

- மாவை வரோதயன் -

அந்த நாள் நினைவுகள் பசுமையானவை. கலை இலக்கியத் துறையில் நாங்கள் அடியெடுத்து வைத்த காலம் எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதி; அதிகம் அதிகமாகத் தேடி வாசிப்பதும், விமர்சிப்பதும் கவிதைகள், கதைகள் என்று எழுதிப் பார்ப்பதுமாக நடந்து வந்த நாட்கள். அப்போது சு.வே. அவர்களது 'மண்வாசனை' சிலாகித்துப் பேசப்பட்டது. எழுத்தாளராக அறியப்பட்ட சு.வே. உறவினராக இருக்கிறார் என்று அறிந்திருக்க வில்லை. எண்பதுகளின் நடுப்பகுதியில் அந்த அறிமுகமும் நடக்கின்றது. என்னைச் சுற்றி, என் உறவினர்களில் எழுத்தாளர்கள் இருப்பதையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டேன்.

ஊரெழு மதி அக்கடமியில் 'மகவம்' மாதாந்த சந்திப்பு தொடராக நிகழும். எழுத்தாளர் வேல் அமுதன் தலைமையில் சிறுகதைப் பட்டறை, விமர்சன அரங்கு, நூல் வெளியீடு, கலைஞர் கௌரவம்,.... என்று ஏதாவது நிகழ்ச்சிகள் நடக்கும். அதில் சு.வே. அவர்களும் பங்கு கொள்வார். அவரை நாங்கள் சந்தன மாமா என்று அழைப்போம். தங்க நிறத்தில் உயரமான அகலமான மனிதர். மேவி இழுத்த தலை, வெள்ளை வேட்டி, பட்டு நிறத்தில் அரைக்கை சேட், நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டு (அந்த இடத்தில் கறுப்பு நிறத்தில் பச்சை குத்தியது போல இருக்கும்) அகலமான சீற் போட்ட சைக்கிள்... அந்த கம்பீரமான மனிதர்தான் எமக்கு ஆதர்ஷமான எழுத்தாளர் சு.வே.

முதுபெரும் எழுத்தாளரும் தமிழறிஞரும் ஆசிரியருமான பண்டிதர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை சு.வே. அவர்களின் இழப்பு மனதை உறுத்துவதாக உள்ளது.

மறுமலர்ச்சிக்கால எழுத்தாளரில் ஒருவரான சு.வே. அவர்கள் பண்டிதமணியின் பாரம்பரியத்தில் உருவான தமிழ்ப் புலமை யாளர். ஆசிரியத்துவம் மிக்கவர். அத்தகு செழுமையினை அவரது

சிறுகதைகளிலும், உருவகக் கதைகள், கட்டுரைகளிலும் காணலாம். ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையைப் பொறுத்தளவில் பழந்தமிழ் இலக்கியத்திற்கும் நவீன இலக்கியத்திற்கும் இணைப்புத் தளமாக மிளிர்ந்தவர்களில் சு.வே.யும் சிறப்பித்துக் கூறப்படவேண்டியவர்.

அதனாலேயே இலங்கை அரசகல்வித் திணைக்களத்தின் பாட நூலாக்கக் குழுவிலும் அவரால் எழுத்தாளராக, நூல் ஆக்குனராக பதவி வகிக்க முடிந்தது. அவரது எழுத்துக்களைப் பாடங்களாக, பாடநூல்களாக படித்தவர் பலர். அவர்கள் இன்று எமது சமுதாயத்தில் பல்வேறு உயர் நிலைகளிலும் உள்ளனர். அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து சிறந்த நாவற்குழி மண்ணும் இன்னும் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களைப் பெற்ற புகழோடு சு.வேயால் பெருமையடைகின்றது.

அதற்கும் அப்பால் வானொலி உரைச் சித்திரங்கள், நாடகங்கள், வானொலி உரைகள், கட்டுரைகள் என்று அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் அதிகம். அவை அனைத்தும் ஒழுங்காக ஆவணப்படுத்தப் படாமற் போனமை எமது துரதிஷ்டமே. அவரைப் பயன்படுத்திய எமது ஊடகங்களும் தவறு இழைத்துள்ளன. ஆனால், அக் காலத்தில் அவர் எழுதிய வானொலி உரைச் சித்திரங்கள் பிற் காலத்தில் வேறு புதிய நபர்களின் பெயர்களில் ஒலிபரப்பப் பட்டதைக் கேட்டு அவர் உளம் வெதும்பியிருக்கிறார்.

அதுவும் அல்லாமல் மூன்று தசாப்தமாகத் தொடரும் இந்த உள்நாட்டு யுத்தம், இடப்பெயர்வு என்பன அறுவடை செய்ததும் இதுபோன்ற இலக்கியக் கலைத்துறை ஆவணங்களின் அழிவுகளையே! சு.வே.யின் கையெழுத்துப் பிரதிகள் மட்டுமல்ல அவரிடம் இருந்த நூல்கள் பலவும் அவல இடப்பெயர்வுகளின் பின்னால், யுத்த அனர்த்தங்களின் பின்னணியில் அழிக்கப்பட்டு விட்டன.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் மித்ரா வெளியீடான சு.வே. அவர்களின் உருவகக் கதை நூலான 'மணற்கோவிலி'ன் அறிமுக விழாவை தேசிய கலை இலக்கியப் பேரவையின் சார்பில் ஒழுங்கு

செய்து நடாத்தியிருந்தோம். அன்று அவர் தனது உள்ளக்கிடக்கையாக இருந்த 'தனது எழுத்துப் பிரதிகள் நூல்களாக வெளிவந்ததன் போதாமை' பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அந்த இழப்புக்களின் வேதனை சு.வே. என்ற எழுத்தாளனை, அறிஞனை, புலமையாளனை இறக்கும்வரை துன்பப்படுத்தியிருக்க வேண்டும். இதனை எண்ணிப் பார்க்கும்போது நமது பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராஜன் (தான்தோன்றிக் கவிராயர்) எழுதிய 'தமக்கென வாழார்!' என்ற பாடல் நினைவை உறுத்தும்.

**ஆறு தனக்காக வன்று பெருகுவது!**
**பேறு மழை தான் பெறவே பெய்யாது!**
**சேறு தனைச் சேர விழையாது வயல்!!**
**சீர் சான்றோர்வாழுவதும் ஊரவர்க்கே ஈய உரம்!!**

***23.03. 1971***

எமது சு.வே. இந்த அளவுகோல் கொண்டே பார்க்க முடிகின்றது. குடும்பத்தவர்களுக்கும் உறவினர், ஊரவர்களுக்கும், முழுத் தமிழ்ச் சமூகத்திற்கும் கல்வித்துறைக்கும் அவர் உரம் ஈந்திருந்தார். ஆனால், அதற்கான கைமாறை நாம் எப்படி ஆற்றப் போகின்றோம்? என்பதே எம்முள் இருக்கும் உறுத்தல்.

எஞ்சியிருக்கும் அவரது எழுத்துக்களை நூலாக்கம் செய்தல், தவறிப்போன இழக்கப்பட்ட அவரது படைப்புக்களை ஏதேனும் வகையில் மீளக் கண்டெடுக்க, மீட்டு ஆவணப்படுத்த முயற்சித்தல், அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கான எழுத்துக்களுக்கான இலட்சிய மனித சமூகத்தை அமைத்தல் அவர் விட்டுச் சென்ற சமுதாயப் பணிகளை முன்னெடுத்தல் என்பவையே அந்த ராஜரிஷிக்கு நாம் இனிமேல் செய்யத்தக்க கைமாறு ஆகும்.

# வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை

- திரு க. இராஜேந்திரன் -

(ஸ்ரீலங்கா புத்தகசாலை சார்பில்)

நாடு போற்றும் நல்லெழுத்தாளனாய், மாணவர்களின் மாண்புறு ஆசானாய், கற்றோர் போற்றும் பண்டிதராய், நூலாசிரியனாய், கல்விக் களஞ்சியமாய் நம் மத்தியில் உலவிய பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே.) அமரர் ஆகிவிட்டாரா? நம்பவே முடியவில்லை நம்மால். அவர் 'நடந்த இடத்துப் புல்லுச் சிலும்பாத' பண்புடை மனிதர். எவரோடும் சினந்து பேசாத பண்பினர். புன்னகை தவழ அனைவருடனும் அன்பாக உரையாடும் இயல்பு கொண்டவர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அவர் எங்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர். எமது தந்தையாருடனும், அவர் மறைவின் பின்னர் எம்முடனும் அன்பு பூண்டு, ஆலோசனைகள் கூறி வழிநடத்தியவர். தமது நூல்களை வெளியிடுமாறு எமக்குத் தந்தவியவர். காணும்போதெல்லாம் கனிவுடன் பேசித் தமது அன்பை வெளிப்படுத்தியவர். உள்ளத்தால் பொய்யாது ஒழுகியவர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். அனைவருடனும் அன்பு ததும்பப் பேசி அவர்தம் இதயங்களை ஈர்த்துக்கொண்டவர். 'சு.வே.' என்ற இரண்டு எழுத்துக்களால் மாணவர் தம் இதயங்களைக் கவர்ந்தவர்.

தமது முதுமைக் காலத்திலும் எழுத்தை நேசித்தவர். சு.வே. மறைந்தாலும் அவரது எழுத்துக்கள் உள்ளவரை அவர் எம் இதயங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பார். அவர் படைப்புக்களை அனைவரும் கற்கவேண்டும் அதுவே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

சு.வே. அவர்களின் ஆன்மா நல்லைக் கந்தன் திருவடிகளில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*ஸ்ரீலங்கா புத்தகசாலை,*
*234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்*

# நேசம் மறக்குதில்லை நெஞ்சம்

- திரு தி. ஜெயராஜா (ஜெகன்)

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

திருமால் ஈரடியால் மண்ணையும் விண்ணையும் அளந்தார். அதேபோன்று சு.வே. என்னும் இரண்டு எழுத்துக்களால் கற்றோர் இதயங்களை ஈர்த்தவர் அமரர் பண்டிதர் சு. வேலுப்பிள்ளை. அவரது வாழ்வு தனித்துவமானது. எம்மனோர்க்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம். மெழுகுதிரி தன்னை எரித்து ஒளி கொடுப்பது போல தம் வாழ்வையே அர்ப்பணித்து அனை வருக்கும் உதவிய பெருந்தகை சு.வே.

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக எங்கள் நிறுவனத் துடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவர் சு.வே. எங்கள் புத்தகசாலையின் தாபகர், அச்சகவித்தகர், அமரர் ஆ. சுப்பிர மணியம் அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர். 'சு.வே. மாஸ்டர்' என்று அவரால் அன்புடன் அழைக்கப்பட்டவர். சு.வேயின் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமையைப் பெரிதும் மதித்து அவர் எழுதிய நூல்களை விருப்புடன் பதிப்பித்து வெளியிட்டவர்.

அமரர் ஆ.சுப்பிரமணியம் அவர்களின் மறைவின் பின்னர் பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர்கொண்ட வேளைகளில் எல்லாம் நல் ஆலோசனைகள் வழங்கி எங்களை வழிப்படுத்தி யவர் சு.வே. அவர்மீது கொண்ட நேசம் எங்களால் என்றும் மறத்தற்குரியதல்ல. நல்லாசானாய், புகழ்மிகு எழுத்தாளனாய், மாணவர் உளம் கவர்ந்த நூலாசிரியனாய் நம்மத்தியில் உலவிய சு.வேயின் திடீர் மறைவு எங்களுக்கு மட்டுமல்ல கல்வி உலகிற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது புன்னகை தவழும் முகமும், இனிய பேச்சும் என்றும் எங்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும் என்பது திண்ணம். முத்தமிழ் அறிஞனாய் நம்மத்தியில் உலவிய அப்பெருந்தகையின் பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழ் மறையாது. நேசம் மறக்காத நெஞ்சங்களில் அவர் என்றும் வாழ்ந்துகொண்டேயிருப்பார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

# பன்முகத்தன்மை வாய்ந்த படைப்பாளி சு.வே.

- திரு த. துரைசிங்கம்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

ஈழத்து இலக்கிய வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த தாரகை ஒன்று மறைந்துவிட்டது. ஆம். சு.வே. அமரராகிவிட்டார். அவரை நன்கறிந்தோர் இதயமெல்லாம் கலங்கித் தவிக்கின்றது. பண்டிதர் சு. வேலுப்பிள்ளை பன்முகத்தன்மை வாய்ந்த படைப்பாளி. அவர் படைப்புக்கள் காத்திரமானவை.

உருவகக்கதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் என்னும் பல்வேறு துறைகளில் அவர் படைத்தவை ஏராளம். ஆனால், அவற்றில் ஒருசிலவே நூலுருப் பெற்றுள்ளன. 'பாற்காவடி', 'மண்வாசனை', 'மணற்கோயில்' என்னும் கதை நூல்களைத் தந்துள்ளார். மூதறிஞர் இராஜாஜி போன்றோரால் பாராட்டப் பெற்ற எழுத்தாளர் அவர்.

சு.வே. தலைசிறந்த தமிழசான். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றியவர். அவரது கற்பித்தல் திறனை அவரிடம் கற்றோர் இன்றும் வாயாரப் போற்றுவதைக் கேட்டுள்ளேன். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பாடநூல் எழுத்தாளராக அவர் பணி செய்த காலம் பொற்காலம் எனலாம். பாடநூல்களை வெகு சிறப்பாக, எழுத்துப் பிழைகளோ, இலக்கணப் பிழைகளோ இன்றி வெளியிடுவதற்கு அவர் உறுதுணையாக விளங்கினார்.

சு.வே.யின் தமிழ் நடை தனித்துவமானது. அவரது நூல்களில் இதனை நன்கு காணலாம். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றிச் சிறுவர்களுக்கும் பயன்தரும் பல நூல்களை எழுதியவர். ஆழ்ந்தகன்ற புலமையாளர். சாகித்திய மண்டல விருது முதல் சம்பந்தன் விருதுவரை பெற்றவர்.

**தாம் இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர். அவரது கல்விப் பணி காலத்தால் அழிக்க ஒண்ணாதது.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் ,
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்னும் திருமூலர் வாக்குக்கேற்பத் தமிழ்ப்பணியையே தன் பணியாகக் கொண்டு செயற்பட்டவர்.

சு.வே. தமக்கென எதையும் தேடிக்கொண்டவரல்லர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை. பிரம்மச்சரிய வாழ்வை மேற்கொண்டு கர்மயோகியாகவே வாழ்ந்தவர். இவரது மறைவு தமிழ் கூறு நல்லுலகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சு.வே.யின் பூதவுடல் மறைந்தபோதிலும் அவரது புகழ் அவர்தம் எழுத்துக்கள் உள்ளவரை நின்று நிலைக்கும் என்பது திண்ணம்.

சு.வே.யின் நினைவு நீடிக்கட்டும்!

---

ஆமையானது தன்னுடைய உறுப்புக்களைத் தன்னுடைய ஓட்டுக்குள் அடக்கிக் கொள்வது போல், தன்னுடைய ஐம்புலனையும் பொருட்கள் மீது செலவொட்டாமல் தடுத்துக் கொள்கிறவனே ஞானி ஆவான்.

- இராமகிருஷ்ணர்

---

# எமது பெரிய உபாத்தியாயர் ஐயா நினைவாக....

நாவற்குழி கூட்டுறவு ஒழுங்கையில் திரும்பும்போது அன்னை பேச்சிஅம்பாள் தரிசனம் பெற்று அடுத்த வளைவால் திரும்பி சிறிது தூரத்தில் அப்பகுதி மக்களின் ''அமுத சுரபி''யான கம்பயன் கிணற்றினையும் தாண்டிச் சென்றால் ஒழுங்கையின் கடைசி வீடாக ஒழுங்கையைப் பார்த்தபடி உள்ள ''தையல் நாயகி வாசம்'' தான் பெரியவர் அவர்களது வாழ்வகமாகும். 20ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் நடந்த கோரயுத்தத்தின் வடுக்கள் அங்காங்கு தெரியும். அவ்வீட்டின் முன்பக்கம் நீண்டு நிற்கும் கூடத்தின் இடது பக்கத்தில் உள்ள பழைய பிரம்புப் பின்னல் நாற்காலியில் மாலை வேளையில் ஒழுங்கையைப் பார்த்தபடி அமர்ந்து கொண்டு அவரது இடது கைக்கு எட்டிய தூரத்தில் உள்ள ஒற்றை அடி வாங்கில் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கும் பழமையான கலை அம்சம் கொண்ட உயரமான வெற்றிலைத் தட்டில் பரப்பியிருக்கும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை என்பவற்றை அளவாக எடுத்து கொடுப்புக்குள் புதைத்து மெல்ல அரைத்து குதப்பி சுவைத்து இயற்கையாகவே சிவந்த உதடுகளை மேலும் சிவப்பாக்கிக் கொண்டு தலையைப் பின்புறமாகச் சாய்ந்து மோன நிலையில் ஆழ்ந்திருப்பார்.

அமைதியான அவரது சிந்தனை ஓட்டம் நாங்கள் கேற் திறக்கும் சத்தத்தினால் தடைப்பட்டதும் ஒருகணம் கேற் பக்கம் உற்றுநோக்கிவிட்டு தன் உடல் நிலையினையும் மறந்து துள்ளி எழுந்து ''ஓ வாருங்கோ, வாருங்கோ என்ன எல்லாரும் ஒன்றாக வாறியள். அப்ப ஏதோ விஷேசமாகத்தான் இருக்கவேணும். மகேந்திரம் உன்ரை ஆட்கள் எல்லோ வருகினம்'' என்று கூறியபடி மெல்ல முன்நோக்கி வந்து எம்மை அன்பாக வரவேற்பது இனி எப்போதும் காணமுடியாத காட்சியானது.

நாங்கள் ஆரம்ப நாட்களில் பெரியவரின் சகோதரரான சின்ன வாத்தியார் என்றும் எம்மால் அழைக்கப்படும் மகேந்திரம் அவர்களைத் தேடியே செல்வோம். ஆனால் பெரியவர்களது

உடல்நலம் குன்றி வீட்டிலேயே அவர் பொழுதைக் கழிக்கத் தொடங்கிய பின் அவரைப் பார்த்து சுகம் விசாரிப்பதே எமது பிரதான நோக்கமாக இருக்கும். இப்படியான சந்திப்புக்களின் போது வீட்டு முற்றத்தின் வடகிழக்கு மூலையில் நிழல் பரப்பி நிற்கும் மாமரத்தின் கீழ் வட்ட வடிவாக கதிரையைப் போட்டு அவரது வாயிலிருந்து மெல்ல மெல்ல வரும் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருப்போம். அவர் தம் இளமைக்கால நினைவு களை அசைபோட்டு ஒவ்வொரு சொல்லாக தமது தகப்பனாருடன் விவசாயம் செய்த அனுபவங்களையும் அக்காலத்தில் நாவற்குழி கிராமத்தின் வாழ்வையும் வளத்தினையும் பற்றி தன்னை மறந்து கூறுவதுடன் பிற்காலத்தில் தான் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தபொழுது அவ் அனுபவங்களே கருப்பொருளாகி காட்சியாக விரிந்த கதையும், ஒரு இலக்கிய பாடமாகவே சொல்லுவார். அவ்வேளையில் நாங்களும் மாணவ நிலையிலேயே இருப்போம். சில நேரங்களில் அபிப்பிராயமும் கேட்பார்.

இப்படியான ஒரு மாலை வேளையில் நாவற்குழி மகா வித்தியாலய உயர் வகுப்பு மாணவிகள் வந்து பெரியவருக்கு வணக்கம் செலுத்தி ''தாங்கள் நம் ஊர்ப் பெரியவர்கள் பற்றிய கட்டுரை வரைய வேண்டும் என்றும் அதற்கு ஐயா அவர்கள் பற்றியே எழுத இருப்பதால் தங்களைப் பற்றிய முக்கிய விபரங்களை அறிந்துகொள்வதற்கு எப்பொழுது வரலாம் என'' அனுமதி வேண்டி நின்றனர். அவர் மாணவிகளைக் கூர்ந்து பார்த்துவிட்டு ''அப்படி என்னைப் பற்றி எழுத என்ன இருக்கின்றது'' என்று ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டு வீட்டுப் பக்கமாகப் போனார். சில நிமிடங்களில் கையில் ஒரு புத்தகத்துடன் வந்து ''இதில் செங்கைஆழியான் எழுதியதற்கு மேலாக நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்று சு.வேயின் சிறுகதைகள் - பாற்காவடி என்ற அப்புத்தகத்தில் சு.வே என்ற படைப்பாளி எனும் மகுடத்தில் செங்கைஆழியான் எழுதிய முகவுரையினை வலது சுட்டுவிரலால் அழுத்திக்காட்டி இரண்டு கைகளாலும் அப்புத்தகத்தை அன்பளிப்பாக அவர்கட்கு வழங்கி வாழ்த்துக்களையும் கூறி அனுப்பி வைத்தார். இக்காட்சியை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு செங்கைஆழியானின் இலக்கிய பணி பற்றி ஒரு விரிவுரையே நடாத்திவிட்டார்.

இதேபோன்று இன்னொரு மாலை வேளையில் உதயன் பத்திரிகையில் முத்தான மூத்தவர்கள் என்னும் தொடர் கட்டுரை எழுதி வந்த பத்திரிகையாளர் நேர்காணலுக்கு வந்தபோதும் நாம்கூட இருந்தோம். வயதில் மிக இளையவரான அவருடன் தோழமை உணர்வுடன் உறவாடி அவர் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் நின்று நிதானித்து ஞாபகப்படுத்தி பதில் அளித்ததுடன் "தான் பெற்ற பாராட்டுகட்கெல்லாம் மற்றவர்களின் உதவியே காரணம்" எனக் கூறியதுடன் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று கேட்டதும் பக்கத்தில் இருந்த ஒரு பழைய சேட்டைப் போட்டுக்கொண்டு "இது போதும் இப்படியே எடும்" என்றார். இப்படியாக இவரது எளிமையான, வித்துவச் செருக்கு இல்லாத இவருடனான எமது இனிய அனுபவங்கள் நீண்டு கொண்டே போகும்.

பெரிய உபாத்தியார் அவர்கள் அடிக்கடி சித்திர வேலாயுத கோயில் பற்றியும் கூறுவார். "நாவற்குழி மெள்ளமெள்ள பழைய நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் எங்கடை வேலாயுதக் கோயில் எப்பொழுது பழைய பொலிவுடன் காட்சிதரப் போகின்றதோ தெரியவில்லை" என்று மனம் நொந்து சொல்லுவார்.

முருகப் பெருமான் மீது நீங்காத பற்றுக்கொண்ட ஐயா அவர்கள் பிரமச்சரிய தவ வாழ்வினை இறுகப் பற்றியிருந்தாலும் தான் தலைமகனாய்ப் பிறந்த அந்தப் பெரிய குடும்பத்தின் மூல விசையாக, ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளியாக, பல துறைகளிலும் ஆரோக்கியமாகக் கால் பதித்தவராக, நல்லாசிரியராக, பாடநூலாக்குவோனாக, சிறந்த விவசாயியாக, நேர்மையான சமூக சேவையாளனாக பன்முகத் தன்மைகள் ஒருங்கே பெறப்பெற்று சுமார் 86 ஆண்டுகள் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நித்தியப் பெருவாழ்வு பெற்ற 31ஆம் நாளான இன்று அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய எம்பெருமானைப் பிரார்த்திப்போமாகுக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாவற்குழி தம்பியின் நண்பர்கள்
கைதடி

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து அமரராகி விட்ட திரு சு. வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்களின்,

❊ இறுதி நாட்களில் வருகை தந்து அவரை உயிரோடு கண்டு உரையாடி அவருக்கு மனநிறைவு அளித்தவர்களுக்கும்,

❊ இறுதிநேரத்தில் உடன் நின்று உற்ற உதவிகள் பல புரிந்தோர்க்கும்,

❊ மரணச்செய்தி அறிந்தவுடன் விரைந்து வந்து பல வகையில் உதவியோருக்கும்,

❊ இறுதிக் கிரியைகளின்போது நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் உபகரித்தோருக்கும்,

❊ மரணச் செய்தி கேட்டு வெளியூர்களிலிருந்தும், குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்புகொண்டு எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும்,

❊ பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்து எம் துயரில் பங்குகொண்டோருக்கும்,

❊ அன்னாரின் இலக்கியப் பணியை நினைவுபடுத்தி அன்னாரை கௌரவித்த பத்திரிகை நிறுவனத்தினருக்கும்,

❊ அந்தியேட்டிக் கிரியைகளின்போது வருகை தந்து உதவி புரிந்தோர்க்கும்,


❊ இம்மலருக்கு இரங்கல் செய்திகள் வழங்கியதன் மூலம் அன்னாரைக் கௌரவித்தோருக்கும்

❊ சபிண்டிகரண வைபவத்துக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து பிரார்த்தித்தோருக்கும் மதிய போசனத்தில் கலந்துகொண்டோருக்கும்

எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இல.5 $^{2}/4$, சென்றா் லோரன்ஸ் வீதி, குடும்பத்தினர்
கொழும்பு - 06.

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்